இயல் நான்கு

இலக்கணவியல்

9CHBEA

உலகில் வாழும் உயிரினங்களுள் மக்களினம் ஒன்றே மொழியாளுமை பெற்று விளங்குகிறது. தம் கருத்தைத் திறம்பட உணர்த்தும் பேச்சுத்திறன் பெற்றுள்ளமை, அவ்வினத்திற்குப் பெருமை சேர்க்கும் செயலாகும். மக்கள் தம் பயன்பாட்டால், நெடுங்காலம் நின்று நிலவும் மொழிக்குரிய இலக்கணம், சீரியமுறையில் வகுக்கப்பட்டமை மொழியின் சிறப்பை உணர்த்துகிறது.

இப்பாடப்பகுதி, இலக்கண நூல்களின் வகைமைகளை விளக்குகிறது; மொழிக்கு வளம் சேர்க்கும் தொடரமைப்புகளை, நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவுபடுத்துகிறது; சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு உதவும் அகராதிகளைப்பற்றி எடுத்துரைக்கிறது; நம் சமூக வாழ்விலும் தனி வாழ்விலும் நம்மோடு பின்னிப் பிணைந்துள்ள மொழிபெயர்ப்பு குறித்தும் விளக்குகிறது.

கற்றல் நோக்கங்கள்

- **மொழியின் கட்டமைப்பில், இலக்கணத்தின் தேவையை உணர்தல்.**
- **இலக்கணம் தோன்றிய சூழல், காலந்தோறும் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சிநிலை ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்.**
- **இலக்கண நூல்களின் வகைமையை அறிதல்.**
- **தற்கால வழக்கில் இலக்கணத்தின் பயன்பாடு அறிந்து, மொழியைச் சிறப்பாகக் கையாளுதல்.**

பாடப் பகுதி

- இலக்கண வரலாறு
- தொடரியல்
- அகராதிக் கலை
- மொழிபெயர்ப்புக் கலை

11th Advance Tamil - FINAL.indd 133 14-02-2019 17:28:12

கட்டுரை

இயல் நான்கு

இலக்கண வரலாறு

இலக்கணத்தின் இன்றியமையாமை

ஒரு மொழிக்கு ஒழுங்கையும் சீர்மையையும் தருவது இலக்கணம். அஃது, ஒரு மொழியின் பல்வேறு கூறுகளை எடுத்துரைக்கிறது; மொழியின் இயக்கத்தைப் பல விதிகளாகப் பாகுபடுத்திக்காட்டுகிறது.

இலக்கணம், பழங்காலந்தொட்டே நம் தமிழ்மொழியின் அமைப்பையும் இலக்கிய மரபையும் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளது. அதுமட்டுமின்றி, காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கவும் அவற்றை எதிர்கொள்ளவும் செய்வதில் இலக்கணத்தின் பங்கு இன்றியமையாததாக உள்ளது.

நாம், தமிழில் திருத்தமாகப் பேசுவதற்கும் படிப்பதற்கும் பிழையின்றி எழுதுவதற்கும் அதன் இலக்கணத்தை நன்கு கற்றுக்கொள்ளல் வேண்டும். ஆழ்ந்த இலக்கண அறிவு பெற்றிருந்தால்தான், இலக்கியத்தின் பல நுட்பமான கருத்துகளைக் கூர்ந்து, உணர்ந்து சுவைக்க முடியும். ஆகவே, இலக்கணம் என்பது, ஒரு மொழியின் கண்ணாகும்.

இலக்கண நூல்களின் தோற்றம்

இலக்கியங்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியபோது, மொழியின் பொதுத்தன்மைகளைத் தொகுத்துப் பிறருக்கு உணர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இலக்கண நூல் எழுத விழைந்தவர்கள், தாம் வாழ்ந்த காலத்திலும் அதற்கு முன்பும் உள்ள மொழி வழக்கு அனைத்தையும் அறிந்து, வகைப்படுத்திக்கூற முயற்சி மேற்கொண்டனர். இஃது, இலக்கணத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

தொல்காப்பியப் பாயிரத்தில், முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி எனக் கூறப்பட்டுள்ளமையும் நூலினுள் என்ப, என்மனார் புலவர், மொழிப, மொழிமனார் எனக் குறிப்பிட்டுள்ளமையும் தொல்காப்பியத்திற்குமுன் இலக்கண நூல்கள் இருந்தன என்பதை உறுதி செய்கின்றன. எனவே, பல நூல்கள் எழுதப்பட்ட பின்னர், நூல்களின் பண்பு நுவலும் இலக்கணங்களும் எழுதப்பட்டன. இலக்கணத் தோற்றம், இலக்கியத்தை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், வழக்குமொழியின் வாழ்வையும் வளத்தையும் போற்றுவதாகவும் அமைந்தது. இதனால்தான், தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம், 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடித் தொல்காப்பியம் தொகுக்கப் பெற்றது' என எடுத்துரைக்கின்றது. இலக்கியங்கள் தோன்றிய பின்பே இலக்கணங்கள் தோன்றுகின்றன என்பதனை உணர்த்தும்வகையில்,

எள்ளினின் றெண்ணெய் எடுபடுவது போல
இலக்கியத் தினின்றும் எடுபடுவது இலக்கணம்

என்னும் பழைய வழக்குத்தொடரும் உள்ளது.

இலக்கண நூல்களின் வளர்ச்சி

தமிழில் இலக்கணநூல்கள் செய்யுள் வடிவத்தையும் உரைநடை வடிவத்தையும் கொண்டுள்ளன. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், செய்யுள் வடிவில் இயற்றப்பெற்ற நூல். தொல்காப்பியத்தைப் பின்பற்றிப் பல நூல்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டுள்ளன. அவை, தொல்காப்பியத்தில் அமைந்துள்ள இயல்களை அடியொற்றித் தனித்தனிப் பகுதி இலக்கணநூலாகத் தோன்றியுள்ளன.

தொல்காப்பிய எழுத்து, சொல் ஆகிய அதிகாரங்களை அடிப்படையாகக்கொண்டு, நன்னூல், நேமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள்

11th Advance Tamil - FINAL.indd 134 14-02-2019 17:28:12

தோன்றின. சொல்லதிகாரம் மட்டும் அமைந்த இலக்கண நூல்கள் பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து என்பனவாகும்.

பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இயல்களுள் அகத்திணையியல் சார்ந்து இறையனாரகப்பொருள், நம்பியகப்பொருள், களவியல் காரிகை, மாறன் அகப்பொருள் முதலிய இலக்கண நூல்கள் தோன்றின.

தொல்காப்பியப் புறத்திணையியல் சார்ந்து, புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிரு படலம் ஆகிய இலக்கண நூல்கள் தோன்றின. செய்யுளியல் சார்ந்து யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலிய யாப்பிலக்கண நூல்களும் உவமவியல் சார்ந்து தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய அணியிலக்கண நூல்களும் எழுதப்பட்டன. இவற்றுள் சில இலக்கண நூல்கள், தொல்காப்பிய மரபை மட்டுமல்லாமல், வடமொழி இலக்கண மரபுகளைத் தமிழுக்குள் கொண்டுவரவும் முயன்றுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னர், உரைநடை வடிவில் இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. இலக்கணச் சுருக்கம், இலக்கணச் சுருக்க வினாவிடை முதலான நூல்கள் உரைவடிவில் அமைந்தவை. கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூல், தமிழின் தனிச்சிறப்புகளைத் தமிழறியாத மேனாட்டினருக்கும் எடுத்துக்காட்டி, விளக்கியுள்ளது.

இனி, இவ்விலக்கண நூல்கள்பற்றித் தனித்தனியாகச் சில குறிப்புகளைப் பின்வருமாறு காணலாம்.

தொல்காப்பியம்

தொல்காப்பியம், ஐந்திலக்கணம் கொண்டு விளங்குகிறது. எழுத்து, சொல், பொருள் ஆகிய அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயலாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்நூல், எழுத்துகளாலும் சொற்களாலும் உருவாக்கப்படும் செய்யுளுக்கும் அதில் இடம்பெறும் பொருளுக்கும் இலக்கண வரையறைகளைத் தந்துள்ளது.

தொல்காப்பியப் பொருளதிகாரம், பழந்தமிழரின் நாகரிகத்தையும் அவர்தம் வாழ்வியல் நடைமுறைகளையும் எடுத்தியம்புகிறது. இவ்வதிகாரத்தில் அமைந்துள்ள இயல்களிலிருந்து இயற்கை, சுற்றுப்புறச்சூழல், அக்கால மக்களின் அகவுணர்வுகள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளமுடிகிறது. போர் நெறிகள் குறித்த செய்திகளைப் புறப்பொருள் பற்றிய இயலிலும் அன்பின் ஐந்திணை அவற்றின் முதல், கரு, உரிப்பொருள் ஆகியவற்றை அகப்பொருள் பற்றிய இயல்களிலும் அறியமுடிகிறது.

இந்நூலுக்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலானோர் உரை எழுதியுள்ளனர்.

தொல்காப்பியம்			
வ.எண்	எழுத்ததிகாரம்	சொல்லதிகாரம்	பொருளதிகாரம்
1.	நூல் மரபு	கிளவியாக்கம்	அகத்திணையியல்
2.	மொழி மரபு	வேற்றுமையியல்	புறத்திணையியல்
3.	பிறப்பியல்	வேற்றுமை மயங்கியல்	களவியல்
4.	புணரியல்	விளிமரபு	கற்பியல்
5.	தொகைமரபு	பெயரியல்	பொருளியல்
6.	உருபியல்	வினையியல்	மெய்ப்பாட்டியல்
7.	உயிர்மயங்கியல்	இடையியல்	உவமவியல்
8.	புள்ளி மயங்கியல்	உரியியல்	செய்யுளியல்
9.	குற்றியலுகரப்புணரியல்	எச்சவியல்	மரபியல்

11th Advance Tamil - FINAL.indd 135 14-02-2019 17:28:12

இறையனார் அகப்பொருள்

இறையனார் என்பவரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் இந்நூல், அகப்பொருள் சார்ந்தது; களவியல் என்ற பெயராலும் வழங்கப்படுகிறது. இறையனார் அகப்பொருள், அகம் என்பதனைக் களவு, கற்பு என்று இரண்டாகப் பிரிக்கிறது. இந்நூலுக்கான மூலம், நமக்குக் கிடைக்கவில்லை; எனினும், நூலுக்குரிய முழுமையான உரைப்பகுதி கிடைத்துள்ளது. இறையனாரகப் பொருள் உரையே தமிழில் தோன்றிய முதல் உரை நூல் என்பர்.

புறப்பொருள் வெண்பாமாலை

புறப்பொருளைப்பற்றி வெண்பா யாப்பில் கூறும் நூல் புறப்பொருள் வெண்பா மாலை. இது புறப்பொருளுக்குரிய இலக்கணத்தையும் இலக்கியத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனை இயற்றியவர் ஐயனாரிதனார். போர் பற்றிய செய்திகளை இந்நூலில் அறியமுடிகிறது.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய பன்னிரு திணைகளின் இலக்கணத்தைத் துறைவகையோடு புறப்பொருள் வெண்பாமாலை விளக்குகின்றது.

தொல்காப்பியம், புறத்திணைகளின் எண்ணிக்கையை 7 எனக் குறிப்பிட, புறப்பொருள் வெண்பாமாலை 12 எனக் குறிப்பிடுகிறது. இதன் அடிப்படையிலேயே புறநானூற்றுக்குத் திணை, துறை வகுக்கப்பட்டுள்ளன.

யாப்பருங்கலக்காரிகை

யாப்பிலக்கணம் கற்பாருக்கு உறுதுணையாக அமைவது யாப்பருங்கலக் காரிகை. காரிகை என்பதற்குப் பெண் எனவும் பொருள் உண்டு. இந்நூலை அமிர்தசாகரர் இயற்றினார். இந்நூலுள் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் இயல்கள் அமைந்துள்ளன.

'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்' என்னும் கூற்று,

புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடும் திணைகள்

திணை	பொருள் விளக்கம்	திணை	பொருள் விளக்கம்
வெட்சி	பகைவரது ஆநிரை கவர்தல்	**தும்பை**	பகை மன்னர் இருவரும் போரிடுதல்
கரந்தை	பகைவர் கவர்ந்த ஆநிரை மீட்டல்	**வாகை**	போரில் வெற்றி பெற்ற மன்னரைப் புகழ்தல்
வஞ்சி	பகை நாட்டின்மீது போர் தொடுத்தல்	**பாடாண்**	ஒருவனுடைய கல்வி, புகழ், வீரம், செல்வம் முதலியவற்றைப் போற்றுதல்
காஞ்சி	பகைவரை எதிர்த்துப் போரிடுதல்	**பொதுவியல்**	வெட்சிமுதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளுக்குப் பொதுவானவற்றையும் அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுதல்
நொச்சி	பகைவரிடமிருந்து மதிலைக் காத்தல்	**கைக்கிளை**	ஒருதலைக் காமம்
உழிஞை	பகைவர், மதிலைச் சுற்றி வளைத்தல்	**பெருந்திணை**	பொருந்தாக் காமம்

11th Advance Tamil - FINAL.indd 136 14-02-2019 17:28:13

யாப்பருங்கலக் காரிகையின் பெருமையையும் அதன் யாப்பைக் கற்பதின் கடினத்தையும் உணர்த்தும். இந்நூலாசிரியர், யாப்பருங்கலம் என்னும் மற்றோர் இலக்கண நூலையும் படைத்துள்ளார். இந்நூலுக்கு உரை எழுதியவர் குணசாகரர்.

வீரசோழியம்

தொல்காப்பியத்திற்குப் பின்னர், ஐந்திலக்கண அமைப்பிலமைந்த நூல், வீரசோழியம். இந்நூல், ஐந்து அதிகாரத்தையும் பத்துப் படலத்தையும் கொண்டுள்ளது. அதன் ஆசிரியர் புத்தமித்திரர். இந்நூல் வடமொழி, தமிழ்மொழி ஆகிய இரண்டுக்கும் இலக்கணம் கூற முற்படுகிறது.

தண்டியலங்காரம்

தமிழில் அணியிலக்கணம் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் முதல் நூலாகும். தண்டி என்பவரால் வடமொழியிலுள்ள காவ்யதர்சம் என்னும் நூலைத்தழுவி, இந்நூல் எழுதப்பெற்றது. இந்நூல் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் இயல்களையும், 125 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. பொதுவணியியலில் செய்யுள் வகை, அதன் இலக்கணம் ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. பொருளணியியலில், தன்மையணி முதல் பாவிகவணி வரை 35 அணிகளின் இலக்கணமும் கூறப்பட்டுள்ளன. சொல்லணியியலில் மடக்கின் வகைகள், அவற்றின் இலக்கணம், சித்திரகவிகளின் இலக்கணம், வழு, வழுவமைதி ஆகியவை சொல்லப்பட்டுள்ளன. பெருங்காப்பியத்தின் இலக்கணமும் இந்நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலுக்குப் பின்னர், சந்திராலோகம், குவலாயனந்தம், மாறனலங்காரம் போன்ற அணியிலக்கண நூல்கள் தோன்றியுள்ளன.



தண்டியலங்காரம்

மூலமும் உரையும்

இவ்வுரை

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனுதிபதியும்
பாலவனத்தம் ஜமீந்தாருமாகவிருந்த
ராஜராஜ ஸ்ரீமாந்

இராமநாதபுரம்

பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

விரும்பியவாறு

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம்

அ. குமாரசுவாமிப்புலவர்

புதுக்கியது

இவை

சுன்னுகம்

கு. அம்பலவாணபிள்ளையால்

பதிப்பிக்கப்பட்டன

1926

நேமிநாதம்

எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும் மற்றொரு நூல் நேமிநாதம். இந்நூல், தொல்காப்பிய எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் சுருக்கமாகக் கூறுவதனால் 'சின்னூல்' என்று அழைக்கப்படுகிறது. வெண்பாவால் அமைந்த நேமிநாதம் நூலைக் கற்றபின்னரே, தொல்காப்பியத்தைக் கற்கும் நடைமுறை இருந்தமை இந்நூலின் சிறப்பைப் புலப்படுத்தும்.

அறிவோம் தெளிவோம்

பழையன கழிதலும் புதியன புகுதலும்

- அவன், இவன், உவன் என்பனவற்றுள் உவன் என்னும் சுட்டுப்பெயர் இன்று வழக்கில் இல்லை.
- நறுமணம் என்னும் பொருளைக் குறித்த 'நாற்றம்' என்னும் சொல், இன்று விரும்பத் தகாத மணத்தைக் குறிக்கிறது.
- தமிழில் மொழிமுதல் வாரா எழுத்துகளுள் ல, ர ஆகியன இன்று பலருடைய பெயர்களின் முதலெழுத்துகளாய் உள்ளன

11th Advance Tamil - FINAL.indd 137 14-02-2019 17:28:13

இதனை எழுதியவர் குணவீரபண்டிதர் ஆவார். இவர், 'வச்சணந்தி மாலை' என்றழைக்கப்படும் வெண்பாப் பாட்டியல் நூலையும் இயற்றியுள்ளார்.

நன்னூல்

தொல்காப்பியத்திற்கு அடுத்ததாக மிகுதியாகப் பயன்பாட்டிலிருக்கும் இலக்கண நூல், நன்னூல். தொல்காப்பியம், தெளிவும் எளிமையும் கொண்டு விளங்க, நன்னூல் செறிவும் சுருக்கமும்கொண்டு விளங்குகிறது. நன்னூலில் எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் உள்ளன. இந்நூலுள் அமைந்துள்ள பொதுப் பாயிரம் (முகவுரை) நல்ல நூலுக்குரிய இலக்கணம், பத்து அழகு, பத்துக்குற்றம், நல்லாசிரியர், ஆசிரியர் ஆகாதவர் ஆகியோரது இலக்கணம், நல்ல மாணாக்கர், மாணாக்கர் ஆகாதவரின் இயல்புகள், பாடங்கற்பிக்கும் முறை, கற்கும் முறை ஆகியன குறித்து விரிவாகக் கூறியுள்ளது. தொல்காப்பியத்தின் பாயிர உரை மேற்கோள்கள், இந்நூலில் இலக்கணச் சூத்திரங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

நன்னூலின் எழுத்ததிகாரத்திலுள்ள பதவியல், தொல்காப்பியத்தின் வளர்நிலையாக அமைந்துள்ளது. இவ்வியல், சொற்களின் கட்டமைப்பைத் தெளிவாக விளக்குகிறது; பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் எனச் சொற்களைப் பகுத்து விளக்குகிறது.

இந்நூலின் சொல்லதிகாரத்தில் இறுதியாக இடம்பெற்றுள்ள,

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'

என்னும் நூற்பா, வழக்கிழந்த இலக்கணக் கருத்துகளை நீக்குவதும் புதிய வழக்குகள் சிலவற்றை ஏற்றுக்கொள்வதும் தவறல்ல; காலந்தோறும் ஏற்படும் மாற்றத்திற்குட்பட்டதே இலக்கணம் எனக்கூறி அமைகிறது. இந்நூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர் முதலானோர் உரை கண்டுள்ளனர்.

நம்பியகப்பொருள்

நம்பி என்பவரால் இயற்றப்பெற்ற இந்நூல் அகப்பொருள் சார்ந்தது. இந்நூல் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்தியலாகப் பகுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம், அகப்பொருள் இலக்கணத்தைத் கதை மாந்தர்களின் கூற்றுவகையாகக் கூற, நம்பியகப்பொருள் அகப்பொருள் இலக்கணத்தைத் துறைவகையாக விளக்கிக் கூறுகிறது. அகஇலக்கிய நூல்களுக்கு இதன் அடிப்படையிலேயே துறை வகுக்கப்பட்டுள்ளது.

இலக்கண விளக்கம்

இந்நூல் எழுத்து, சொல், பொருள் என மூவதிகாரமாகப் பகுக்கப்பட்டு, ஐந்திலக்கணமும் கூறுகிறது. தொல்காப்பியத்தைப் பின்பற்றி விரிவாக எழுதப்பட்டிருப்பதால் இந்நூலைக் 'குட்டித்தொல்காப்பியம்' என்றும் அழைப்பர். இந்நூலை இயற்றியவர் வைத்தியநாத தேசிகர் ஆவார்.

தொன்னூல் விளக்கம்

இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவரால் தமிழில் எழுதப்பட்ட இலக்கணநூல் தொன்னூல் விளக்கம். இந்நூல்

அறிவோம் தெளிவோம்

தமிழில் சொற்கள் அல்லது தொடர்களை இணைக்க உம் என்னும் இடைச்சொல் வரும். ஆனால், ஆங்கில மொழியில் பயன்படுத்தப்படும் and என்னும் சொல்லாட்சிக்கேற்ப, 'மற்றும்' என்னும் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

(எ.கா.)

'பேரறிஞர் அண்ணா, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்'.

இவ்வாறு கூறுவது, ஆங்கிலமொழியின் தாக்கமே. இத்தொடரைப் 'பேரறிஞர் அண்ணா, தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்'. என எழுதுவதே ஏற்புடையது.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தை உடையதாகும். இந்நூலாசிரியர், தம்நூலில் நன்னூல் கருத்துகளையே பெரும்பான்மையாக எடுத்தாண்டுள்ளார்.

பாட்டியல் நூல்கள்

சிற்றிலக்கியங்களின் அமைப்பு முதலானவற்றை விளக்க, பாட்டியல் நூல்கள் தோன்றின. பாட்டியல் நூல்களுள் முதன்மையானதாகக் கருதப்பெறுவது 'பன்னிரு பாட்டியல்'. இஃது எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூவியலாக அமைந்துள்ளது. 'வச்சணந்தி மாலை' என்னும் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் என்பன, பாட்டியல் நூல்களுள் சிலவாகும்.

மொழிவளம் காக்கும் இலக்கணங்கள்

இற்றைக்காலத்தில் செய்யுள் வடிவில் இலக்கண நூல்கள் இயற்றப்பெறவில்லையாயினும் உரைநடை வடிவில் எழுதப்பட்டு வருகின்றன. காலந்தோறும் இலக்கியங்கள் புதுப்புது வடிவங்களில் மாற்றம் பெறும்போது, அவற்றிற்கான இலக்கணங்களும் தோன்றத் தொடங்கியுள்ளன. ஆகவே, இலக்கணத்தின் இன்றியமையாமையை உணர்ந்து, தமிழ்மொழியை வளம்பெறச் செய்வது நம் கடமையாகும்.



தொல்காப்பியத்திலிருந்து தோன்றிய சில இலக்கண நூல்கள்

11th Advance Tamil - FINAL.indd 139 14-02-2019 17:28:13

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குட்டித்தொல்காப்பியம் என அழைக்கப்படும் நூல்-----------.

   அ) நன்னூல் ஆ) தொன்னூல் விளக்கம் இ) இலக்கண விளக்கம் ஈ) நேமிநாதம்

2. தண்டியலங்காரம் – தண்டி ; இறையனார் அகப்பொருள் – இறையனார்

   நம்பியகப்பொருள் – நம்பி ; வீரசோழியம் – ?

   அ) வீரசோழர் ஆ) குணவீரபண்டிதர் இ) புத்தமித்திரர் ஈ) வீரமாமுனிவர்

3. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்'– இத்தொடர் உணர்த்துவது

   அ) கவிதை எழுதுவது எளிது ஆ) கவிதை எழுதுவது அரிது

   இ) கவிதை எழுதக் காரிகைத் தேவையில்லை ஈ) பேரிகை கொட்டினால் பிழைக்கலாம்

4. அகப்பொருள் சாராத நூலைத் தேர்க.

   அ) களவியல் காரிகை ஆ) பன்னிரு படலம்

   இ) நம்பியகப்பொருள் ஈ) இறையனார் களவியல்

5. தொல்காப்பியம் கற்பதற்கு முன்னர், பயிற்சி பெற வேண்டிய நூல்------.

   அ) நன்னூல் ஆ) நேமிநாதம் இ) இலக்கண விளக்கம் ஈ) வீரசோழியம்

6. சரியாகப் பொருந்தியுள்ள விடைக்குறிப்பைத் தேர்க.

அ)		1	பகைவரிடமிருந்து மதிலைக் காத்தல்
ஆ)		2	பகைவரின் மதிலை வளைத்தல்
இ)		3	பகைவரின் ஆநிரை கவர்தல்
ஈ)		4	பகைவரிடமிருந்து ஆநிரை மீட்டல்

	1	2	3	4
அ)	2	3	1	4
ஆ)	1	2	3	4
இ)	4	1	2	3
ஈ)	3	4	2	1

11th Advance Tamil - FINAL.indd 140 14-02-2019 17:28:13

7. படம் உணர்த்தும் இலக்கண நூல் வகையைக் கண்டறிக.

அ)

ஆ)

குறுவினா

1. ஒரு மொழிக்கு இலக்கணம் ஏன் தேவை?
2. 'சின்னூல்' என்றழைக்கப்படும் நூல் எது? ஏன்?
3. இறையனாரகப்பொருள் – குறிப்பு வரைக.
4. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' – இத்தொடர், இன்றைய நடைமுறை இலக்கணத்திற்குப் பொருந்தியிருப்பதற்குச் சான்று தருக.
5. வழுவற்ற தொடரைக் கண்டறிக.

   அ) தந்தையர் தமது பிள்ளைகளை வழிநடத்துவர்.

   ஆ) தந்தையர் தனது பிள்ளைகளை வழிநடத்துவர்.

   இ) தந்தையர் தம் பிள்ளைகளை வழிநடத்துவர்.

   ஈ) தந்தையர் தன் பிள்ளைகளை வழிநடத்துவர்.

சிறுவினா

1. தொல்காப்பியப் புறத்திணையியல் சார்ந்து, தனிநூலாகப் பிற்காலத்தில் வளர்ந்த இலக்கண நூல்கள் யாவை? அவை குறித்து எழுதுக.
2. அணியிலக்கணம் தோற்றம் பெற்றதில், தொல்காப்பியத்தின் பங்கு யாது?
3. நன்னூல் – குறிப்பு வரைக.
4. "நான் நாளை வருகிறேன்" என உங்கள் நண்பர் கூறுகிறார். அவர் பேசிய தொடரில் இலக்கணப்பிழை உள்ளதா? ஆம் எனில், அதனை விளக்கிக் கூறுக.
5. தொழிற்றுறை, தொழிற்துறை, தொழில்துறை – இவற்றுள் புணர்ச்சிவிதிப்படி அமைந்த சொற்றொடர் எது? ஏன்? அதற்கான இலக்கணம் தருக.

நெடுவினா

1. மொழிக்கு அரணாக அமைவது இலக்கணம் – இக்கூற்றை நடைமுறைப் பேச்சு வழக்குகள்கொண்டு விளக்குக.
2. தொல்காப்பிய இயல்களின் வளர்ச்சியாகத் தோன்றிய பிற்கால இலக்கண நூல்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

11th Advance Tamil - FINAL.indd 141 14-02-2019 17:28:13

கட்டுரை

தொடரியல்

தொடரியல் – ஓர் அறிமுகம்

சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவது தொடர். தொடரமைப்பு, அதன் பயன்பாடு ஆகியவற்றை ஆராய்வது தொடரியல். தொடரியலின் சிறப்பு, ஒரு மொழியின் வளத்தைக் காண உதவுகிறது. ஒரு மொழியில் சொற்களும் அவற்றின் பொருள்களும் காலந்தோறும் சிறிது வேறுபடக் காணலாம். ஆனால், சொற்றொடர் அமைப்பில் பெரும் மாறுதல் ஏற்படுவதில்லை. அவ்வாறு மாறுதல் ஏற்படினும், அம்மொழியின் அடிப்படை இயல்புக்கு மாறாக அமைவதில்லை. ஆதலால், சொற்றொடர் அமைப்பு ஒன்றே அம்மொழியின் தனிச்சிறப்புகளை உணர்த்த வல்லதாய் உள்ளது.

தொல்காப்பியம் காட்டும் தொடரமைப்புகள்

நாம் பிறரிடம் பேசும்போது, தொடர்களாகத்தான் பேசுகிறோம். நாம் பயன்படுத்தும் தொடர்களில் இயல்பாகவே இலக்கணக்கூறுகள் அமைந்துள்ளன. அவற்றைத் தொல்காப்பியம் சில நூற்பாக்களில் சுட்டிக்காட்டியுள்ளது. அத்தகைய தொடரமைப்புகள், பின்வரும் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை விளக்குவதற்கான எடுத்துக்காட்டுகள், இலக்கியத்திலிருந்தும் நடைமுறை வழக்கிலிருந்தும் எடுத்தாளப்பட்டுள்ளன.

- தொடரில் சொற்கள் அமைந்துவரும் நிலை
- திணை – பால் – எண் - தொடர்ப்பொருத்தம்
- ஒரு சொல் அல்லது தொடர் அடுக்கி வருதல்
- ஒரு தொடரை அடிப்படையாகக்கொண்டு செருகலும் விரித்தலும்
- தொடரில் முன் பின் மாற்றம்
- ஒரு தொடரை இரு வகையாக விளக்குதல்
- இலக்கணக்கூறு நோக்கில் மாற்றம் – தோன்றா எழுவாய்
- தொடரமைப்பில் ஆகுபெயர்

தொடரில் சொற்கள் அமைந்துவரும் நிலை

கண்ணன் வந்தான்; அவன் கடிதம் கொண்டு வந்தான்.

இங்குக் கண்ணன் என்பது, இயற்பெயர்; அவன் என்பது, சுட்டுப்பெயர். இவ்வாறு இயற்பெயரையுடைய ஒரு தொடரும், அதற்குரிய சுட்டுப்பெயரையுடைய மற்றொரு தொடரும் வரும்போது, அவை, அடுத்தடுத்து வருதல் வேண்டுமெனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

திணை – பால் – எண் – தொடர்ப் பொருத்தம்

ஒரு தொடரிலுள்ள எழுவாய், அதன் பயனிலையோடு திணை, பால், எண் ஆகியவற்றில் ஒத்திருத்தல் வேண்டும். அவ்வாறு வருவது, தொடர்ப் பொருத்தம் ஆகும். இதனைக் கீழ்க்காணும் பட்டியல்வழிப் புரிந்துகொள்ளலாம்.

தொடர்கள்	திணை	பால்	எண்
மாறன் சிரித்தான்	உயர்திணை	ஆண்பால்	ஒருமை
மணிமொழி பாடினாள்	உயர்திணை	பெண்பால்	ஒருமை
மக்கள் மகிழ்ந்தனர்	உயர்திணை	பலர்பால்	பன்மை
மான் துள்ளியோடியது	அஃறிணை	ஒன்றன்பால்	ஒருமை
மலர்கள் மலர்ந்தன	அஃறிணை	பலவின்பால்	பன்மை

11th Advance Tamil - FINAL.indd 142 14-02-2019 17:28:13

மேற்கண்ட தொடர்களில், எழுவாய்ப் பெயரின் திணை-பால், வினைமுற்றின் திணை-பால் ஆகியன ஒத்திருக்கின்றன. இவைபோன்று தொடர்கள் அமைதல் வேண்டும். தம் மரபில் மயங்கி வருதல் கூடாது. இதனை,

'வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே'

(தொல். சொல். கிளவி. 11)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

சில தொடர்களில், இருதிணைக்குரிய எழுவாய் விரவி வரும்போது, அத்தொடருக்குரிய பயனிலை எத்திணைக்குரிய முடிவு பெறும் என்பதில் தடுமாற்றம் ஏற்படலாம். கீழ்க்காணும் தொடரைக் காணுங்கள். சரியான வினைமுற்றைத் தேர்ந்தெடுங்கள்.

மன்னனும் நால்வகைப் படைகளும் விரைவாக முன்னேறிச்__________

(சென்றார்கள் / சென்றன)

விடை காண முடிந்ததா? இத்தொடரில், உயர்திணை எழுவாயும் அஃறிணை எழுவாயும் கலந்து வந்து ஒரு முடிவினைக் கொள்ளும்போது, அவை சிறப்பை நோக்கினால் உயர்திணையிலும், இழிவை நோக்கினால் அஃறிணையிலும் முடியும். ஆகவே, இத்தொடர் சிறப்பு நோக்கி மன்னனும் நால்வகைப் படைகளும் விரைவாக முன்னேறிச் சென்றார்கள் என உயர்திணை முடிவு பெறும். மேலும் சில தொடர்கள்:

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா. (இழிவு நோக்கி அஃறிணை முடிபு)

இடையனும் ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் சென்றன. (அஃறிணை எழுவாய் மிகுதி)

ஆசிரியர்கள், மாணாக்கர்கள், கல்வி அலுவலர், தலைமையாசிரியர், நூல்கள் இப்பள்ளியில் இருக்கிறார்கள். (உயர்திணை எழுவாய் மிகுதி)

எனவேதான், திணை – பால் – எண் ஆகியவற்றிற்கேற்பத் தொடர்ப் பொருத்தம் அமைவது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

வழுநிலை

ஒரு தொடரில் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று மாறுபட்டு, முன்நின்ற சொல்லுக்கு ஏற்றவாறு அமையாமல் இலக்கணக் குற்றம் தோன்ற வருவது வழுநிலை. வினா, விடை, மரபு ஆகியன இடம்பெறும் தொடரிலும் வழு தோன்றும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியன இடம்பெறும் தொடரில் வழு வருமிடங்களும் உள்ளன.

வழு – குற்றம் / பிழை

வழுநிலை	
அவன் வந்தது	(திணை வழு)
கண்மணி வந்தான்	(பால் வழு)
பறவைகள் பறந்தது	(எண் வழு)
நான் உண்டாய்	(இட வழு)
நாளை வருகிறேன்	(கால வழு)
இந்தச் சேவல் எத்தனை முட்டை போடும்?	(வினா வழு)
"உன் பெயர் என்ன" எனக் கேட்டால், "உடல்நலம் இல்லை" என விடையளிப்பது	(விடை வழு)
மயில் கூவும்	(மரபு வழு)

வழாநிலை	
அவன் வந்தான்	(திணை வழாநிலை)
கண்மணி வந்தாள்	(பால் வழாநிலை)
பறவைகள் பறந்தன	(எண் வழாநிலை)
நான் உண்டேன்	(இட வழாநிலை)
நாளை வருவேன்	(கால வழாநிலை)
இந்தக் கோழி எத்தனை முட்டை போடும்?	(வினா வழாநிலை)
உன் பெயர் என்ன? என் பெயர் மாசிலாமணி	(விடை வழாநிலை)
மயில் அகவும்	(மரபு வழாநிலை)

வழாநிலை

மணிமாலா பாடினாள் என்னும் தொடரில் இலக்கணக் குற்றமில்லை. இது வழாநிலைத் தொடராகும். 'மணிமாலா' என்னும் உயர்திணைப் பெண்பாற் பெயர், 'ஆடினாள்' என்னும் உயர்திணைப் பெண்பாற் விகுதியைப் பெற்று முடிந்துள்ளது. ஆகவே, நம் முன்னோர் எச்சொல்லை எப்பொருளால் குறித்தனரோ, அச்சொல்லை அப்பொருளிலேயே தொன்றுதொட்டு வழு இல்லாமல் கூறுவதே வழாநிலை. (இலக்கணக் குற்றமில்லாத நிலை)

வழுவமைதி

பசுவைப் பார்த்து, ''என் அம்மை வந்தாள்" எனக் கூறுவது உண்டு. பசு என்பது, அஃறிணையாயினும், அன்பு மிகுதியால் உயர்திணைக்குரிய பெயரைப் பெற்றுள்ளது. இத்தொடர், இலக்கணக் குற்றமுடையதாயினும் சான்றோரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றமையால் வழுவமைதி ஆயிற்று. இலட்சுமி எனப் பசுவைப் பெயரிட்டு அழைப்பது, ஆண் குழந்தையைப் பெண் குழந்தையைக் குறிக்கும் சொல்லாலும் (வாடி கண்ணே) பெண் குழந்தையை ஆண் குழந்தையைக் குறிக்கும் சொல்லாலும் (வாடா செல்லம்) கூறுவனவெல்லாம் வழுவமைதிகளே. இன்றைய நடைமுறைப் பேச்சில், இளைஞர்களும் இளம்பெண்களும் தங்களுக்குள் எதிர்பாலினரைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்துவதனைக் காணலாம். ஆகவே மொழி என்பது, இலக்கண வரம்புக்கு உட்பட்டதாயினும் சிலபோது விதிமீறல், வரம்பு மீறல் ஆகியன ஏற்படுகின்றன. அவை ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை ஏற்றுக்கொள்வதற்கு இலக்கண நூலார் வகுத்ததே வழுவமைதியாம்.

காவிரி பொங்கி வருகிறாள் - இத்தொடர் வழுவமைதியா? காரணம் கூறுக.

வழு வருமிடங்கள்

எழுத்து வழு – திருகுறள் (ஒற்று மிகுத்து எழுதாமை.)

சொல் வழு – நான் சிரித்தான் (நான் சிரித்தேன் என எழுதாமை)

பொருள் வழு – கடற்கரையை உடைய வெற்பனே (நெய்தல் நிலத்திற்குரிய தலைவனைக் குறிக்காமல், குறிஞ்சி நிலத் தலைவனைக் குறித்தது).

யாப்பு வழு – 'வரிவளைக்கைத் திருநுதலாள். . .' (வெண்பாவில் கலித்தளை மயங்குதல் காய்முன் நிரை)

அணி வழு – 'இலங்கு வளை அன்ன நலங்கேழ் ஆம்பல் . . .' (வெள்ளாம்பல்

வழுவமைதி	வழுவமைதி வகை
மரம் போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்	திணை வழுவமைதி (உயர்திணையை அஃறிணையாக்குதல்) ஏன்? சிந்திக்க.
நரியார் வந்தார், கிளியார் பேசினார்	திணை வழுவமைதி (அஃறிணையை உயர்திணையாக்குதல்)
சிறுமியாக இருந்தபோது, நான் மணல் வீடு கட்டுவது இந்தக் கடற்கரைதான்.	கால வழுவமைதி (இறந்தகாலத்திற்கு எதிர்காலம் வருதல்)
வேல்விழி நினைத்தால், ஓட்டப்போட்டியில் முதற்பரிசுதான்.	இட வழுவமைதி (வேல்விழி என்னும் பெண், நான் நினைத்தால் எனத் தன்மையில் கூறாமல் படர்க்கையில் கூறுதல்.)
இவ்வழி அவ்வூருக்குப் போகும்	மரபு வழுவமைதி (இயங்காத பொருளை இயங்குவதாய்க் கூறுதல்.) வழி - நடந்து செல்லும் பாதை

11th Advance Tamil - FINAL.indd 144 14-02-2019 17:28:14

பூவைச் சங்குக்கு உவமையாகக் கூறுதல் பொருத்தமில்லாதது.)

ஒரு சொல் அல்லது தொடர் அடுக்கி வரும் முறை

அடுக்கு என்பது, மீண்டும் மீண்டும் வருவதை அடிப்படையாகக் கொண்டது. அது சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் அமைந்து வரும்.

1. சொல் நிலையில் அடுக்குமுறை

ஒரு சொல் அடுக்கி வருவதற்கு எடுத்துக்காட்டாக,

ஏஏ இஃதொத்தன் – இசைநிறை

என்ன என்ன - அசைநிலை

வருக வருக - பொருளொடு புணர்தல் ஆகியவற்றைக் கூறலாம்.

இசைநிறை, செய்யுளில் வரும் எனக் குறிப்பிட்டாலும், பேச்சு வழக்கிலும் வருமென்பதை மறுத்தல் இயலாது.

எ.கா. போ, போ என் கண்முன் நில்லாதே,

'இசைநிறை அசைநிலை பொருளொடு
புணர்தலென்(று)
அவைமூன் றுஎன்ப ஒருசொல் அடுக்கே'

(தொல். சொல்.எச்சம். 411)

என்னும் நூற்பாவின்வழி, சொல் அடுக்கி வருவதை அறியலாம்.

2. தொடர் நிலையில் அடுக்குமுறை

தொடர் நிலையில், வினையெச்சங்கள், வினைமுற்றுகள், வேற்றுமையுருபுகள் ஆகியன அடுக்கி வரும்.

அ) வினையெச்சங்கள் அடுக்கி வருதல்

ஒரு தொடரில் பல வினையெச்சங்கள் அடுக்கி வருவதும் உண்டு.

எ.கா. நான் ஊருக்குச் சென்று, பெற்றோரைப் பார்த்து, அவர்களுடன் உரையாடி, அறுசுவை உணவு உண்டு, எனது கல்லூரி விடுதிக்குத் திரும்பி வந்தேன்.

'பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே'

(தொல். சொல். வினை. 233)

ஆ) வினைமுற்றுகள் அடுக்கி வருதல்

ஒருதொடரில் பல வினைமுற்றுகள் அடுக்கி வந்தாலும் அவை ஒரு பெயரைக்கொண்டு முடிதல் வேண்டுமெனத் தொல்காப்பியம் கூறுகிறது.

எ.கா. வந்தாள், பார்த்தாள், மகிழ்ந்தாள் மலர்க்கொடி.

'அவைதாம்
தத்தம் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே'

(தொல். சொல். எச்சம். 429)

இ) வேற்றுமையுருபுகள் அடுக்கி வருதல்

ஒரு தொடரில் பல உருபுகள் அடுக்கி வந்தாலும், பொருள் உணர்த்தும்வகையில், முடிக்கும் சொல்லால் அமையும்.

எ.கா. பூனைக்குக் கிண்ணத்தில் பாலை ஊற்றி வைத்தான்.

இத்தொடரில் முறையே நான்காம், ஏழாம், இரண்டாம் வேற்றுமையுருபுகள் வந்துள்ளன.

ஈ) அடை, சினை, முதல் அடுக்கி வருதல் – வண்ணச் சினைச் சொல்

செங்கால் நாரை இத்தொடர், செம்மை + கால் + நாரை எனப் பிரியும். இத்தொடரில், அடையைக் (பண்பைக்) குறிக்கும் செம்மை என்னும் சொல் முதலிலும், சினையைக் (உறுப்பைக்) குறிக்கும் சொல் இரண்டாவதாகவும், முதலைக் (எழுவாயைக்) குறிக்கும் சொல் மூன்றாவதாகவும் வந்துள்ளன. கரிகால் வளவன், செங்கண் செழியன், மைவிழி மாதவி எனப் பெயர்கள் அமைந்துள்ளமையைக் காணலாம். பேச்சுவழக்கில் அழுமுஞ்சிப் பாப்பா, சுருட்டைத்தலைப் பையன் என வருவனவும் வண்ணச் சினைச் சொற்களே. இவ்வாறு அடை, சினை, முதல் ஆகியன மயங்காது முறையாக அடுக்கி வருவதனை,

11th Advance Tamil - FINAL.indd 145 14-02-2019 17:28:14

'அடைசினை முதலென முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்'
(தொல். சொல்.கிளவி. 26)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

ஒரு தொடரை அடிப்படையாகக்கொண்டு இடைச்செருகலும் விரித்தலும்

ஒரு தொடரில் பெயரெச்ச, வினையெச்சங்கள், தாம் முடிக்கும் சொல்லுக்குமுன் இடையில் வேறு சொற்களும் வரலாம். இவ்வாறு வரும்சொல்லை இடைநிலை எனத் தொல்காப்பியர் குறித்துள்ளார். மொழியியலார், இடைச்செருகல் எனக் குறிப்பிடுகின்றனர்.

1. பெயரெச்சத் தொடரில் இடைநிலையாக (செருகலாக) வரும் சொல்

ஆடிய மயில் - ஆடிய அழகான மயில் (அழகான என்பது இடைச்செருகல்)

கிடைத்த நூல் - கிடைத்த அரிய நூல் (அரிய என்பது இடைச்செருகல்)

2. வினையெச்சத் தொடரில் இடைநிலையாக (செருகலாக) வரும் சொல்

படித்துக் கூறினான். - படித்துப் பொருள் கூறினான். (பொருள் என்பது இடைச்செருகல்)

உழுது வந்தான். - உழுது ஏரோடு வந்தான். (ஏரோடு என்பது இடைச்செருகல்)

இக்கருத்தைப் பின்வரும் நூற்பா குறிப்பிடுகிறது.

'தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
எச்சொல் ஆயினும் இடைநிலை வரையார்'
(தொல். சொல்.வினை. 237)

(சிவணும் – பொருந்தும், வரையார் – நீக்கார்.)

'அறத்தை அரசன் விரும்பினான்' எனவும் 'உண்டது பசித்த யானை' எனவும் வரும் தொடர்களில், முறையே வேற்றுமையுருபும் முற்றுவினையும் அமைந்துள்ளன. அரசன், பசித்த என்னும் பிற சொற்கள் அவற்றோடு பொருந்தி வந்துள்ளன. இவ்வாறு பிற சொற்கள் நிற்றலை 'இடைப்பிறவரல்' என்பர். இதனை,

'உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன'

என நன்னூல் குறிப்பிடுகிறது.

இடைச்செருகலாக வந்த சொற்கள், பின்னாளில் பெயரடை, வினையடைகளாகத் தொடர்களில் அமைந்தன. சிலபோது, அடைகளாகப்பொருந்திவரும்சிலதொடர்களில், பொருள் மயக்கம் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாகப் புதிய மாணாக்கர் விடுதி என்னும் தொடரில், மாணாக்கர் என்னும் சொல் இடைச்செருகலாக வரும்போது, மாணாக்கர் புதியவரா, விடுதி புதியதா என்பதில் பொருள் மயக்கம் ஏற்படுகிறது.

புதிய மாணாக்கர் எனப் பொருள் கொள்ளும்போது, மாணாக்கர்தாம் புதியவர். புதிய என்னும் அடைமொழி, மாணாக்கருக்குத் தாம் பொருந்தியுள்ளது. புதிய விடுதி எனப் பொருள் கொள்ளும்போது, விடுதிதான் புதியது.

அறிவோம் தெளிவோம் — தொகைநிலையும் தொகா நிலையும்

சொற்கள் தொடர்ந்துநின்று, பொருள் தருவது தொடர். இருசொல்லுக்கு இடையே ஏதேனும் ஓர் உருபு மறைந்து வருவது, தொகைநிலைத் தொடர். வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என அறுவகைத் தொகைகள் உள்ளன. (தொகை – தொக்கி வருதல்/ மறைந்து வருதல்)

தொகைநிலைக்கு எதிர்மறை தொகாநிலை. இரு சொல்லுக்கிடையே உருபு/ சொல் மறையாது வருவது. தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது உள்ளன. அவை: எழுவாய்த்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத் தொடர் என்பன.

11th Advance Tamil - FINAL.indd 146 14-02-2019 17:28:14

புதிய என்னும் அடைமொழி, விடுதிக்குத்தான் பொருந்தியுள்ளது. ஆகவே, இவ்வாறு வரும் தொடர்களைக் கண்டறிந்து, பொருள் மயக்கமின்றி எழுதுதல் வேண்டும்.

பெயரடையும் வினையடையும் அமைந்த தொடர்கள்

பெயரைச் சிறப்பித்து வருவது, பெயரடை. வினையைச் சிறப்பித்து வருவது, வினையடை.

நாம் பேசும்போது, இவைபோன்ற தொடர்களை மிகுதியாகப் பயன்படுத்துகிறோம். ஒரு நாள் முழுவதும், நீங்கள் பேசிய தொடர்களில் இடம்பெற்ற பெயரடை, வினையடைகளைப் பட்டியலிட்டுப் பாருங்கள். நாம் இத்தனை சொற்களைப் பயன்படுத்தினோமா! என வியப்படைவீர்கள்.

ஒரு தொடரை இருவகையாக விளக்குதல்

குறிப்பிட்ட ஒரு தொடரை இருவகையாக விளக்குவது குறித்தும் தொல்காப்பியர், சில நூற்பாக்களில் கூறியுள்ளார்.

(எ.கா.) புலி கொல் யானை. இத்தொடர் இருவகையில் பொருள் மாற்றமுடையதாக அமையும். புலியைக் கொன்ற யானை எனவும் புலியால் கொல்லப்பட்ட யானை எனவும் இரு மாறுபட்ட பொருளைத் தருகின்றது. இங்கு வினைமுதல் மாறுவதற்கேற்ப, வினை வடிவம் மாறுகிறது. இதனைத்,

'தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான' –

(தொல். சொல். வேற். மயங்கியல் 95)

என்னும் நூற்பா விளக்குகிறது. ஆகவே, தொடரில் பொருள் மயக்கம் தோன்றாத வகையில் ஏற்புடைய வேற்றுமையுருபுகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

தொடரில் முன் பின் மாற்றம்

ஒரு தொடரில் வேற்றுமையுருபு முன் பின்னாக வரும். அதாவது, தொடரின் இடையிலும் வரும், இறுதியிலும் வரும்.

எ.கா. உழுதான் வயலை (தொடரின் இறுதியில் ஐ உருபு வந்தது)

கணினியை இயக்கினான் (தொடரின் இடையில் ஐ உருபு வந்தது)

தமிழில் தொடரியலைவிட உருபனியல் கட்டமைப்புடன் விளங்குகிறது. தொடரியல் அமைப்பு, நெகிழ்வுத் தன்மை கொண்டுள்ளது.

பெயரடையும் வினையடையும் அமைந்த தொடர்கள்

குதிரை ஓடியது = பெயர் + வினை

வெள்ளைக் குதிரை = பெயரடை + பெயர்

வெள்ளைக் குதிரை ஓடியது = பெயரடை + பெயர் + வினை

வெள்ளைக் குதிரை விரைவாக ஓடியது = பெயரடை+ பெயர் + வினையடை+வினை

11th Advance Tamil - FINAL.indd 147 14-02-2019 17:28:14

எடுத்துக்காட்டாக,

வைகறைச்செல்வி பாடம் படித்தாள் என்னும் தொடரைக் காண்போம்.

வைகறைச்செல்வி படித்தாள் பாடம்

படித்தாள் வைகறைச்செல்வி பாடம்

படித்தாள் பாடம் வைகறைச்செல்வி

பாடம் வைகறைச்செல்வி படித்தாள்

பாடம் படித்தாள் வைகறைச்செல்வி

மேற்கண்ட தொடர் நெகிழ்வுத் தன்மைகொண்டுள்ளதனை அறியலாம். இதுபோலச் சில தொடர்களில் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றை இடம் மாற்றியமைத்தாலும் பொருள் மயக்கம் ஏற்படாது.

ஆங்கிலத்தில் தொடரியல் அமைப்பு, நெகிழ்வுத்தன்மை கொண்டதன்று. அம்மொழியில், ஒரு தொடரிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை இடம் மாற்றினால், பொருளும் மாறுபடும். (எ.கா.) *The cat killed the rat.*

தமிழில், உருபனியல் அமைப்புடைய தொடரில், சொற்கள் இடம் மாறினால், பொருள் மயக்கம் ஏற்படும். எடுத்துக்காட்டாக,

பொன்மணி பாடலைப் பாடினாள் என்னும் தொடரைக் காண்போம்.

பொன்மணி ஐ பாடல் பாடினாள்

(வேற்றுமையுருபு ஐ இடம் மாறியுள்ளது)

என்று மாற்றியமைத்தால், பொருள் மயக்கம் ஏற்படுகிறது. ஆகவே, தொடரியல் அமைப்பைவிட உருபனியல் அமைப்பு, கட்டமைப்பு உடையது என உணரலாம்.

இலக்கணக்கூறு நோக்கில் மாற்றம் – தோன்றா எழுவாய்

இலக்கணக்கூற்றின் அடிப்படையிலும் தொடரில் மாற்றம் ஏற்படும். எடுத்துக்காட்டாகத் திண்ணை மெழுகிற்று என்னும் தொடரைக் கூறலாம். இத்தொடரில் எழுவாய் இல்லை. ஆயினும், இத்தொடரிலுள்ள செயப்படுபொருளே (திண்ணை) எழுவாயாக வந்துள்ளது.

உண்மையில், நான் திண்ணையை மெழுகினேன் என்பதே சொல்லப்பட வேண்டிய தொடர். ஆனால், திண்ணை மெழுகிற்று எனக் கூறும்போது, நான் என்னும் எழுவாய் வெளிப்படையாக இல்லை. எழுவாய் மறைந்து வருவதனால், அதனைத் தோன்றா எழுவாய் எனக் குறிப்பர்.

மேலும், திண்ணை மெழுகப்பட்டது எனச் செயப்பாட்டு வினைத்தொடராக அமையும்போது, திண்ணை என்பது, எழுவாயாக அமைகிறது. ஆகவே, செயப்பாட்டு வினை இல்லாமலே செயப்படுபொருள், எழுவாயாக வரும் என்பதைத் திண்ணை மெழுகிற்று என்னும் தொடர் விளக்குகிறது.

மேலும் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

முள் குத்திற்று, வாள் வெட்டிற்று, எழுதுகோல் எழுதிற்று, கல் தடுக்கிற்று ஆகியனவற்றைக் கூறலாம். இக்கருத்தைச்

ஒலியனியல்

குறிப்பிட்ட ஒரு மொழியில் உள்ள பேச்சு ஒலிகளைக் குறிப்பது ஒலியனியல். ஒரு மொழியில் பொருள் வேறுபாட்டை உணர்த்தக்கூடிய மிகச்சிறிய ஒலிக்கூறே ஒலியன். எ.கா. பட்டம் – சட்டம் இச்சொற்களில் முதலில் அமைந்துள்ள பகரமும் சகரமும் (ப், ச்) பொருளை வேறுபடுத்துகின்றன. இவை ஒலியன்கள்.

உருபனியல்

ஒரு மொழியில் பொருள் உணர்த்தும் மிகச்சிறிய கூறு உருபன். இதனைப் பகுக்க முடியாது. ஒலியனை அடையாளம் காண்பதற்கு இரு ஒலிகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும் தன்மை மட்டும் போதுமானது. உருபன்களை அடையாளம் காண வேண்டுமானால், அதன் வடிவமும் அதுஉணர்த்தும் பொருளும் தேவை.

11th Advance Tamil - FINAL.indd 148 14-02-2019 17:28:14

'செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே'

(தொல். சொல். வினை 246)

என்னும் நூற்பா விளக்குகிறது. இதன் வாயிலாகத் தொல்காப்பியர், தொடரில் ஏற்படும் மாற்றங்களை இலக்கணக் கூற்றின் அடிப்படையில் விளக்க முடியும் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலத்தில் இதுபோலத் தொடர் வருவதுண்டு.

Peter opened the door. (With Subject)

The door was opened. (Without Subject)

தோன்றாச் செயப்படுபொருள்

ஒரு தொடரில் செயப்படுபொருள் வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கலாம். அவ்வாறு மறைந்து வருவது தோன்றாச் செயப்படுபொருள். நான் படித்தேன் என்னும் தொடரில், பாடம் என்னும் செயப்படுபொருள் வெளிப்படையாகத் தோன்றவில்லை. நான் ஆடினேன் என்னும் தொடரிலும் நடனம் என்னும் செயப்படுபொருள் வெளிப்படையாகத் தோன்றவில்லை. இத்தொடர்களில் படித்தேன், ஆடினேன் என்னும் வினைமுற்றுகளே செயப்படுபொருளை உணர்த்திவிடுகின்றன.

உருபனியலை அடையாளங்காணல்

முருகனுக்குத் தந்தான், பசித்தவர்க்கு உணவளித்தான் என்னும் தொடர்களில் கு என்னும் வேற்றுமையுருபு கொடைப்பொருளையே குறிக்கிறது. இவ்வுருபை மேலும் பகுக்க முடியாது. கு என்னும் உருபை முருகன், பசித்தவர் ஆகிய சொற்களிலிருந்து பிரித்தாலும், பெயர்ச்சொற்கள் பொருளைத் தருகின்றன. ஆனால், கொக்கு, சுக்கு ஆகிய சொற்களிலுள்ள கு என்பதைப் பிரிக்க முடியாது. பிரித்தால் கொக், சுக் என்பன பொருள் தரா. ஆகவே,

முருகனுக்கு – கு என்பது ஓர் உருபன்.

கொக்கு – கு என்பது உருபன் அன்று. அது சொல்லின் உறுப்பே.

தோன்றாப் பயனிலை

ஒருதொடரில்பயனிலைவெளிப்படையாக வரவில்லையெனில், அதனைத் தோன்றாப் பயனிலை என்பர்.

எனக்குப் பசி (இருக்கிறது)

எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு கோவில் (இருக்கிறது)

என்னும் தொடர்களில், இருக்கிறது என்னும் பயனிலை வெளிப்படையாகத் தோன்றவில்லை. இவ்வினைமுற்று, தோன்றாப் பயனிலையாகும்.

முக்காலத்துக்கும் பொருத்தமுடைய வினைமுற்று

முக்காலத்தும் இருக்கும் ஒரு பொருளை விளக்கும்போது, அத்தொடரின் வினைமுற்று, செய்யும் என்னும் வாய்பாட்டில் அமைதல் வேண்டும் என வினையியலில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக,

நீர் குளிரும்

மலை நிற்கும்

ஞாயிறு தோன்றும்

ஐப்பசி மாதத்தில் அடைமழை பெய்யும்

நூலகம் காலை ஒன்பது மணிக்குத் திறக்கும்

ஆகிய தொடர்களைக் கூறலாம். இவையனைத்தும் செய்யும் என்னும் வாய்பாட்டால் அமைந்துள்ளன. இதுபோல் ஆங்கிலத்திலும் உண்டு. (எ.கா.) *The Sun rises in the east.*

முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லு நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்

(தொல்.வினை. 240)

தெரிநிலை வினைமுற்று

வினைமுற்றுச் சொற்கள் தெரிநிலை, குறிப்பு என இருவகைப்படும். ஒரு செயலைத் தெளிவாகத் தெரிவிக்கும் வினை, தெரிநிலை

11th Advance Tamil - FINAL.indd 149 14-02-2019 17:28:14

வினைமுற்று. இவ்வினைமுற்றின் விகுதியானது திணை, பால், எண், இடம் ஆகியவற்றையும் உணர்த்துகிறது. எடுத்துக்காட்டாக, நடந்தான் என்னும் வினைமுற்றில் உயர்திணை(திணை), ஆண்பால்(பால்), ஒருமை(எண்), படர்க்கை(இடம்) ஆகியன உள்ளன. இஃது, இறந்தகாலத்தையும் குறிக்கிறது; செய்பவன், கருவி, காலம், நிலம், செயல், செய்பொருள் ஆகிய ஆறனையும் வெளிப்படையாக உணர்த்துகிறது.

எழுதினாள் – இவ்வினைமுற்று மேற்கூறிய ஆறனையும் வெளிப்படுத்துகிறதா ? கண்டறிக.

குறிப்பு வினைமுற்று

செயல் செய்பவரை வெளிப்படையாகக் காட்டிச் செயலையும் காலத்தையும் குறிப்பாகத் தெரிவித்து நிற்கும் வினைச்சொல்லே குறிப்பு வினைமுற்று. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய அறுவகைப் பெயரின் அடியாகக் குறிப்புவினை தோன்றும். இவன் பொன்னன் என்பது, பொன்னை உடையவனாக இருந்தான், இருக்கிறான், இருப்பான் எனப் பொருளுணர்த்திச் செயலையும் காலத்தையும் குறிப்பாகவும் செயல் செய்பவனை வெளிப்படையாகவும் கூறுகிறது.

தொடரமைப்பில் ஆகுபெயர்

நாம் பேசும்போது, இயல்பாகவே நம்மையறியாமல் இலக்கணக்கூறுகளைப் பயன்படுத்திப் பேசுகிறோம். எடுத்துக்காட்டாக ஆகுபெயரைக் கூறலாம். கீழ்க்காணும் உரையாடல்களைப் படித்துப்பாருங்கள். அவற்றுள் ஆகுபெயர் இடம்பெற்றுள்ளதனை அறிந்துகொள்வீர்கள்.

(வீட்டில். . .)

அம்மா: கண்ணா, பள்ளிக்கு நேரமாகவில்லையா?

கண்ணன் : அம்மா, இன்று *பள்ளிக்கு விடுமுறை.*

(பேருந்து நிறுத்தத்தில். . .)

ஒருவர் : ஐயா, *47 சென்றுவிட்டதா?*

மற்றொருவர் : இன்னும் வரவில்லை.

(பேருந்தில். . .)

நடத்துநர்: *காந்தி மண்டபம் யாரு?* இறங்குங்க.

(அலுவலகத்தில். . .)

மேலாளர் : *அந்த நீலச்சட்டை* இன்னும் வரவில்லையா?

(பள்ளியில். . .)

முகிலன்: மதி, *பாரதியாரைப் படித்துவிட்டாயா?*

மதியழகன் : ஓ! படித்துவிட்டேனே!

மேற்கண்ட உரையாடல்களில், பள்ளிக்கு விடுமுறை என்பது, பள்ளியைக் குறிக்காமல், அங்குப் படிக்கும் மாணாக்கருக்கு விடுமுறை என்பதனைக் குறிக்கிறது. இஃது, இடவாகுபெயர். இதுபோலவே மற்ற தொடர்களிலுள்ள ஆகுபெயர்களையும் கண்டறியுங்கள்.

ஆகுபெயர் என்பது, ஒரு பொருளின் இயற்பெயர், அதனைக் குறிக்காமல் அதனொடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகி வருவதாகும். ஆகுபெயர் குறித்தும் அதன் வகைகள் குறித்தும் ஏற்கெனவே படித்திருக்கிறீர்கள். அவற்றை நினைவு கூருங்கள்.

தமிழில் ஆகுபெயர், தொடரியல் இலக்கணத்துடன் தொடர்புடையதாக உள்ளது. பெயர்கள் தொடரிலிருந்து வருவிக்கப்படுவதனால், அவற்றை வேற்றுமை மயங்கியலில் தொல்காப்பியர் அமைத்துள்ளார்.

பலவகைத் தொடர்கள்

இன்றைய வழக்கில், நாம் பேச்சிலும் எழுத்திலும் பலவகைத் தொடர்களைப் பயன்படுத்துகிறோம். செய்தித்தொடர், வினாத்தொடர், கட்டளைத்தொடர், உணர்ச்சித் தொடர் ஆகியன நாம் படிக்கும் நாளிதழ், வார, மாத இதழ்கள், விளம்பரம், அறிவிப்பு ஆகியவற்றிலும் இடம்பெறுகின்றன. அவற்றைப் படித்துப் பார்ப்பதுடன் இருந்துவிடாமல்,

அவற்றின் தொடரமைப்பை அறிந்துகொள்ளவும், பிழை கண்டறிந்து திருத்தவும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

தொடர் வகையும் தொடரமைப்பும்

தொடர்கள், கருத்தை வெளிப்படுத்தும் வகையில் நால்வகையாக அமைந்து வருவதனை ஏற்கெனவே படித்திருப்பீர்கள். அவற்றை மீண்டும் நினைவுகூர்வோமா?

தொடர்வகைகளுக்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

தொடர் வகை

- செய்தித் தொடர்
- வினாத் தொடர்
- விழைவுத் தொடர்
- உணர்ச்சித் தொடர்

தொடர்வகை	தொடர்
செய்தித்தொடர்	என் தந்தை தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.
வினாத்தொடர்	'ஆனந்தயாழை மீட்டுகிறாய்' என்னும் பாடலைப் பாடிய கவிஞர் யார்?
விழைவுத்தொடர்	மழை வருவதற்குமுன் வீட்டுக்குச் செல்க. (கட்டளை) நீடூழி வாழ்வாயாக! (வாழ்த்துதல்) வாய்மையையும் நேர்மையையும் பின்பற்றாதவர்கள் ஒழிக. (வைதல்) வயிறார உணவிடுக. (வேண்டுதல்)
உணர்ச்சித்தொடர்	ஐ! எவ்வளவு பெரிய யானை! (வியப்பு) அந்தோ! தாவரங்கள் நீரின்றி வாடுகின்றனவே! (துன்பம்/அவலம்) தலைவா, வருக! வருக! உன் வரவு நல்வரவாகுக! (மகிழ்ச்சி)

தொடரமைப்புகள்

தொடரமைப்புகளுள் சிலவற்றைத் தனிநிலை, தொடர்நிலை, கலவைத் தொடர்கள் என ஆங்கில இலக்கண அமைப்பையொற்றிக் கூறுகின்றனர். அத்தகைய அமைப்புடைய தொடர்கள், பெரும்பான்மையாகக் கதை, கட்டுரைகளில் இடம்பெறுகின்றன.

தனிநிலைத் தொடர்

கண்மணி நாளிதழ் படிக்கிறாள்.

(ஓர் எழுவாய், ஒரு பயனிலை)

கண்மணி நாளிதழையும், வளவன் வார இதழையும், முருகன் மாத இதழையும் படிக்கின்றனர்.

(பல எழுவாய்கள், ஒரே பயனிலை)

தொடர்நிலைத் தொடர்

நான் நன்றாகப் பொருளுணர்ந்து படித்தேன்; அதனால், தேர்வில் முதலிடம் பெற்றேன். (ஒரே எழுவாய், பல பயனிலைகள்)

நான் என்பது எழுவாய். படித்தேன், பெற்றேன் என்பன பயனிலைகள். அதனால் என்பது, இணைப்புச்சொல்.

இவ்வாறு, ஒன்றுக்கும் மேற்பட்ட தொடர்கள், அதனால், ஆகையால், ஏனெனில், ஏனென்றால் முதலான இணைப்புச் சொற்களால் இணைக்கப்பட்டு வருவதும், ஓர் எழுவாய், பல பயனிலைகளைக்கொண்டு முடிவதும் தொடர்நிலைத் தொடர்களாகும்.

11th Advance Tamil - FINAL.indd 151 14-02-2019 17:28:14

கலவைத்தொடர்

தமிழில் பிழையின்றி எழுத வேண்டுமெனில், நல்ல தமிழ்நூல்களைப் படிக்க வேண்டும் என்னும் தொடரில், நல்ல தமிழ்நூல்களைப் படிக்க வேண்டும் என்பது, முதன்மைத் தொடர். தமிழில் பிழையின்றி எழுத வேண்டுமெனில் என்பது, சார்புத் தொடர். இவ்வாறு, பல தொடர்கள் கலந்து ஒரே தொடராக வருவது கலவைத் தொடராகும்.

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றுதல்

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றும் பயிற்சியைக் கீழ்வகுப்புகளிலேயே மேற்கொண்டுள்ளோம். அவ்வாறு மாற்றம் பெறும் தொடர்களை வினை மாற்றம், கூற்று மாற்றம், ஒரு தொடரைப் பல்வகையாக மாற்றுதல் எனப் பகுத்துக் காணலாம்.

வினை மாற்றம்

ஒரு தொடரை மற்றொரு தொடராக மாற்றும்போது, பெயர்ச்சொற்கள் மாற்றம் அடைவதில்லை. வினைச்சொற்களே மாற்றம் அடைகின்றன.

- செய்வினை – செயப்பாட்டு வினை

பூங்குழலி யாழ் மீட்டினாள் – செய்வினைத்தொடர்

யாழ் பூங்குழலியால் மீட்டப்பட்டது – செயப்பாட்டு வினைத் தொடர்

தன்வினை – பிறவினை

தமிழழகன் கல்வி கற்றான் – தன்வினை

தமிழழகன் கல்வி கற்பித்தான் – பிறவினை

உடன்பாட்டு வினை– எதிர்மறை வினை

கலைச்செல்வி நேற்று வந்தாள் – உடன்பாட்டு வினை

கலைச்செல்வி நேற்று வந்திலள் – எதிர்மறை வினை

இன்றைய வழக்கில், இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் தொடர்களில் எதிர்மறைப் பொருளை உணர்த்த இல்லை என்னும் சொல் பயன்படுகிறது. எதிர்காலத்தில் எதிர்மறைப்பொருளை உணர்த்த ஆ என்னும் எதிர்மறை இடைநிலையுடன் சேர்ந்த மாட்டா (மாட்டு + ஆ) மாட்டாள் என்னும் சொல் வருகிறது.

இளமுருகன் நேற்று வரவில்லை (இறந்தகாலம்)

விண்ணரசி இன்று வரவில்லை (நிகழ்காலம்)

இனியன் நாளை வரமாட்டான் (எதிர்காலம்)

அல்ல என்னும் சொல்லும் ஐம்பால்மூவிடத்துக்கும் முக்காலத்திலும் எதிர்மறைப் பொருளில் வருகிறது.

நான் அல்ல, நீ அல்ல, நாங்கள் அல்ல, நீங்கள் அல்ல.

அவன் அல்ல, அவள் அல்ல, அவர் அல்ல, அது அல்ல, அவை அல்ல.

(நான் அல்லேன்; நீ அல்லை; நாங்கள் அல்லேம் என்பன இலக்கண வழக்கு.)

கூற்று மாற்றம்

ஒருவர் கூறியதனையே கூற்று என்கிறோம்.

- நேர்க்கூற்று – அயற்கூற்று

ஒருவர் பேசுவது, நேர்க்கூற்று எனவும், அவர் பேசியதனைப் பிறர் வாங்கி (எடுத்து)க் கூறுவது அயற்கூற்று எனவும் கூறுவர்.

"தேன்மொழி, நூலைக் கொடு" என்று, வளவன் கேட்டான். – நேர்க்கூற்று

நூலைத் தனக்குக் கொடுக்குமாறு தேன்மொழியை வளவன் கேட்டான்.

– அயற்கூற்று

ஒரு தொடரைப் பலவகைத் தொடர்களாக மாற்றுதல்

ஒரு தொடரைப் பலவகையாகவும் மாற்றலாம். எடுத்துக்காட்டாக, கதிரவன்

ஓவியம் வரைந்தான் என்னும் தொடரை வெவ்வேறு தொடராக மாற்றிப் பார்ப்போம்.

கதிரவன் ஓவியம் வரைந்தான் – செய்தித்தொடர் (உடன்பாடு)

கதிரவன் ஓவியம் வரைந்திலன் – செய்தித்தொடர் (எதிர்மறை)

கதிரவன் ஓவியம் வரைந்தானா – வினாத்தொடர்

கதிரவா, ஓவியம் வரை – கட்டளைத்தொடர்

கதிரவா, என்னே! உன் ஓவியத்தின் அழகு! – உணர்ச்சித்தொடர்

என மாற்றியமைக்கலாம். மேலும், அத்தொடரை ஓவியம் கதிரவனால் வரையப்பட்டது எனச் செயப்பாட்டு வினைத்தொடராகவும், கதிரவன் ஓவியம் வரைவித்தான் எனப் பிறவினைத் தொடராகவும் மாற்றலாம்.

மொழிநடை

கற்போர் உள்ளம் கவரும்வகையில் எழுதுவதே மொழிநடையாகும். மொழிநடை என்பது, தொடர்களில் உள்ள அமைப்பொழுங்கைக் குறிப்பது எனலாம். கட்டுரைகளையும் நூல்களையும் படைக்கும் படைப்பாளர்கள், தமக்கெனக் குறிப்பிட்ட ஒரு மொழிநடையைப் பின்பற்றுகின்றனர். அவர்களின் படைப்புகளில், தொடர்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. இனிய நடை, எளிய நடை, தனித்தமிழ் நடை, இலக்கிய நடை, மணிப்பிரவாள நடை, அடுக்குமொழி நடை, வினாவிடை நடை என்பன சில மொழிநடைகளாகும்.

வினாவிடை நடை

கைபுனைந்தியற்றா ஓரழகே அழியா அழகெனப்படும். கைபுனைந்தியற்றும் அழகு அழியுந்தன்மையது. கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு என்றார் நக்கீரனாரும். கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப்படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன? அவை எக்கருவிகளால் செய்யப்பட்டன? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப்பட்டன? புனலுக்குத் தண்மை ஈந்தவர் எவர்? நெருப்புக்கு வெம்மையூட்டினவர் எவர்? இயல்பாக அரும்பிய இவற்றின் அழகே கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி. –முருகன் அல்லது அழகு, திரு. வி. கலியாண சுந்தரனார்

இவ்வுரைப்பகுதியில் வினா கேட்டு, அதற்கு விடை கூறுவது போன்ற தொடர்கள் அமைந்துள்ளன. பண்டைய இலக்கண உரைநூல்களில், இவ்வினா விடை நடையைப் பெரிதும் காணலாம். இதற்குத் தடைவிடை நடை என்றும் பெயர். (தாமே தடைகளை எழுப்பி, விடை கூறும் நடை). இவ்வுரைப்பகுதியின் மொழிநடைச் சிறப்பைப் பட்டியலிடுவோமா!

- சிறு சிறு தொடர்களாக அமைந்துள்ளன.
- வினாத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

தெரியுமா?

ஒரு வேர்ச்சொல்லிலிருந்து, எண்ணற்ற சொல் வடிவங்களை/சொல்லாக்கங்களை உருவாக்க இயலும்.

எ.கா. படி என்னும் வேர்ச்சொல்லிலிருந்து . . .

படித்த	படித்து	படித்தல்
படிக்கிறேன்	படித்தேன்	படிப்பேன்
படிக்கிறோம்	படித்தோம்	படிப்போம்
படிக்கிறாய்	படித்தாய்	படிப்பாய் . . .

மேலும், பல சொல் வடிவங்களைக் காண இந்த வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

www. tamilvu.org (தமிழ் இணையக் கல்விக்கழகம்)

11th Advance Tamil - FINAL.indd 153 14-02-2019 17:28:15

- அழகு, கவின், வனப்பு என ஒரு பொருள் தரும் பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இயற்கை – செயற்கை, புனல் – நெருப்பு, ஞாயிறு – திங்கள், தண்மை – வெம்மை என எதிர்ச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.
- காரிருள் நீழல், தேன் பூங்கா வனம், வான் பரந்த பொழில், கான் பரந்த தூறு என அடைமொழிகள் வந்துள்ளன.
- மலையும் ஆறும் காடும் கடலும், ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் என எண்ணும்மைகள் அமைந்துள்ளன.
- 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்னும் அழகிய தொடர் உள்ளது.

இவ்வாறு, இவ்வுரைப்பகுதியின் நடைச்சிறப்பை உய்த்துணரலாம். ஆகவே, நாம் பலவகை மொழிநடைகளையும் அறிந்துகொள்ள வேண்டுமானால், அறிஞர் பலர் எழுதியுள்ள பல நூல்களையும் படித்தல் வேண்டும்.

தொடரியலுக்கு வளஞ்சேர்க்கும் விகுதிகள்

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர், காலந்தோறும் மொழியில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்களிலும் இடம்பெறத் தொடங்கின. எடுத்துக்காட்டாகச் சங்கம் மருவிய காலத்தில் ஆளர், காரர் ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள் சேர்ந்து, புதிய சொற்கள் உருவாகின.

மணிப்பிரவாள நடை

மணியும் பவளமும் கலந்ததுபோல் வடசொற்களையும் தமிழ்ச்சொற்களையும் கலந்து எழுதும் நடை. இடைக்காலத்தில் இந்நடை செல்வாக்குப் பெற்றிருந்தது. பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி முதலிய நூல்கள் இந்நடையில் அமைந்திருந்தன.

(காவலாளர் – மணிமேகலை), (கஞ்சக்காரர் – சிலம்பு).

பல்லவர், சோழர், நாயக்கர் காலங்களிலும் மொழியில் மாற்றங்கள் ஏற்பட்டன. நாயக்கர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட காரன், காரி, சாலி ஆகிய ஆக்கப்பெயர் விகுதிகள், இக்காலத் தொடர்களிலும் மிகுதியாகப் பயன்படுகின்றன. இவை வடமொழியோடு ஒப்புமையாக்கப்பட்ட விகுதிகளாகும். எடுத்துக்காட்டாகப் பால்காரன், வீட்டுக்காரி, வண்டிக்காரர், புத்திசாலி, பலசாலி, பொறுமைசாலி, திறமைசாலி, மேலாளர், விற்பனையாளர், உரிமையாளர், கல்வியாளர், சிந்தனையாளர் ஆகியவற்றைக் கூறலாம்.

தொடர்களையும் அவற்றிற்குரிய இலக்கண விதிகளையும் அறிந்துகொள்வது மட்டுமன்றிப் பலவகைத் தொடர்களைப் பயன்படுத்திப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் செய்வோம். மொழியின் தொடரியல் அமைப்பைப் போற்றுவோம்.

படிப்போம் சுவைப்போம்

திருக்குறளில் தொடரமைப்புக் கூறுகள்

தோன்றா எழுவாய்	தோன்றாச் செயப்படுபொருள்	தோன்றாப் பயனிலை
இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சி யவர்க்கு' *குறள். 352* எது இன்பம் பயக்கும்? என்னும் வினாவுக்கு, மாசறு காட்சியவர்க்கு அக்காட்சி இன்பம் பயக்கும். இங்குக் காட்சி என்பது, தோன்றா எழுவாய்.	*சென்ற இடத்தால் செலவிடா தீதொரிஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு'* *குறள். 422* எதை உய்ப்பது அறிவு? என்னும் வினாவுக்கு, மனத்தை உய்ப்பது அறிவு என விடை வரும். இங்கு, மனம் என்பது, தோன்றாச் செயப்படுபொருள்.	*கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை'* *குறள் .15* கெடுக்க வல்லதும் மழை, காக்க வல்லதும் மழை. இங்கு வல்லது என்பது, தோன்றாப் பயனிலை. நாம்தான் அச்சொல்லை வருவித்துக் கொள்ளல் வேண்டும்.

11th Advance Tamil - FINAL.indd 154 14-02-2019 17:28:15

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சிலம்பரசன் அரசுப் பள்ளியில் படிக்கிறான். அவன் தம்பியும் அதே பள்ளியில் படிக்கிறான்– இத்தொடரமைப்பு--------------

   அ) இயற்பெயர் + இயற்பெயர் ஆ) இயற்பெயர் + சுட்டுப்பெயர்

   இ) சுட்டுப்பெயர் + இயற்பெயர் ஈ) சுட்டுப்பெயர் + சுட்டுப்பெயர்

2. செழியன் காலை எழுந்து, நூல் படித்து, உணவு உண்டு, பள்ளிக்குச் சென்றான் – இத்தொடரில் அடுக்கி வந்திருப்பது

   அ) வினையெச்சங்கள் ஆ) வினைமுற்றுகள் இ) பெயரெச்சங்கள் ஈ) வேற்றுமையுருபுகள்

3. வண்ணச் சினைச்சொல்லைக் குறிக்காத தொடர்------------

   அ) செங்கால் நாரை ஆ) கரிகால் வளவன் இ) அழகிய மரம் ஈ) பைந்தண்டுத் தாமரை

4. பாடும் குயில் – இப்பெயரெச்சத் தொடரில் இடையில் வருவதற்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுக்க.

   அ) கரிய ஆ) சிவந்த இ) மெல்லிய ஈ) வெள்ளை

குறுவினா

1. தொடரில், வேற்றுமையுருபுகள் அடுக்கி வருவதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
2. மான் மேய்ந்தது – இத்தொடரில், இரு சொல்லுக்கிடையே வேறு பல சொற்களை இணைத்துத் தொடர்களை உருவாக்குக.
3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அடைமொழியுடன் வருமாறு தொடர்களை அமைத்துக்காட்டுக.
4. குழந்தை சிரித்தது – இத்தொடரைச் செயப்பாட்டு வினைத் தொடராக மாற்ற இயலுமா? காரணம் கூறுக.
5. பறவைகள் தம்கூட்டை நோக்கிப் பறந்து சென்றது – இத்தொடரில் அமைந்துள்ள பிழையைக் கண்டறிந்து, திருத்துக. இதுகுறித்துத் தொல்காப்பியம் விளக்குவதைக் குறிப்பிடுக.
6. வழுநிலை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

சிறுவினா

1. தொடர்ப் பொருத்தம் அமைந்து வருவதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. செயப்படுபொருளே எழுவாயாக வரும் என்பதைத் தொல்காப்பியம்வழி விளக்குக.
3. நாம் பேசும்போது, இயல்பாகவே ஆகுபெயரைப் பயன்படுத்துகிறோம் என்பதனை நடைமுறை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

11th Advance Tamil - FINAL.indd 155 14-02-2019 17:28:15

4. ஏதேனும் ஒரு செய்தித்தொடரை உருவாக்குக. அத்தொடரை வெவ்வேறு தொடர்களாக மாற்றியமைத்துக்காட்டுக.

5. கீழ்க்காணும் உரைப்பகுதியின் மொழிநடைச் சிறப்பை விளக்குக.

"சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ! கைத் தோலுரியக் கல்லுடைக்கும்போது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ! சிறைக்கோட்டத்தில் வேலை ஒழிந்த வேளையில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். வள்ளுவர் குறள் படித்து உள்ளம் தழைத்தேன்".

நெடுவினாக்கள்

1. அண்மையில், நீங்கள் கேட்ட உரையாடலில் இடம்பெற்ற தொடர்களின் தொடரமைப்புகளை ஆராய்ந்து எழுதுக.

2. சொல் நிலையிலும், தொடர் நிலையிலும் சொற்கள் அடுக்கி வருவதனை நடைமுறை எடுத்துக்காட்டுகளோடு விளக்குக.

3. வழுநிலை, வழாநிலை, வழுவமைதி ஆகியவற்றுக்கு நடைமுறை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

படிப்போம் சுவைப்போம்

விருந்தொன்றில் கலந்துகொண்ட அனைவருக்கும் பழம்பால் வழங்கப்பட்டது. அங்கிருந்த புலவர், மற்றொருவரிடம், "பண்புத்தொகையா? உம்மைத்தொகையா?" என்று வினவினார். இவர், புலவர் கூறியதன் பொருள் புரியாமல் விழித்தார். "என்ன ஐயா, விளங்கவில்லையா?

பழம்பால் என்று கூறினால், பண்புத்தொகை. (பழைமை + பால்). அதாவது, பழைய பால்

பழம் பால் என்று கூறினால், உம்மைத்தொகை. (பழம் + பால்) அதாவது, பழமும் பாலும். புரிந்ததா" என்று புலவர் விளக்கினார். அவரின் சிலேடை நயத்தைக் கேட்டு, இவர் வியப்பில் ஆழ்ந்தார்.

(பால் பழம் எனக் கூறினால், உம்மைத்தொகை மட்டுமே வரும்.)

அறிவோம் தெளிவோம் — ஒரு சொல் இரு பொருள்

பெரும்புலவர் ஒருவர் விருந்துண்ணச் சென்றார். விருந்து முடிந்ததும், அவர் பருகுவதற்குப் பால் வழங்கப்பட்டது. அந்தப் பாலில் ஒரு சிற்றெறும்பு கிடந்தது. அதனைக் கண்டதும் அவர், "பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்கிறான்" என்றார். அவர் கூறியதன் பொருள் விளங்காமல், அருகிலிருந்தவர்கள் வியப்புடன் நோக்கினர். அதற்கு அப்பெரும்புலவர், 'சீனி (சருக்கரை) யின் வாசத்தை அறிவது எறும்புதானே! அதனால், எறும்பைச் சீனிவாசன் என்று கூறலாமல்லவா! இந்தப் பாலில் எறும்பு இருப்பதைப் பாருங்கள். அதைச் சுட்டவே, "பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்கிறான் என்று கூறினேன்" என விளக்கம் தந்தார்.

பாற்கடலில் சீனிவாசன் – இருபொருள்

- திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள இறைவன்
- சீனியின் வாசம் அறியும் எறும்பு

11th Advance Tamil - FINAL.indd 156 14-02-2019 17:28:15

உரையாடல்

அகராதிக் கலை

கற்பனை உரையாடல்

இடம்: சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

உரையாடுவோர்: அமுதா, அந்தோணி, அப்துல்லா இவர்களுடன் அகராதி

அகராதி: *மாணாக்கர்களே! என்ன தேடுகிறீர்கள்?*

அமுதா: *எங்கிருந்து வருகிறது குரல்? (அமுதா, அந்தோணி, அப்துல்லா ஆகிய மூவரும் சுற்றும்முற்றும் பார்க்கின்றனர்).*

அகராதி: *நான்தான் அகராதி பேசுகிறேன். உங்களுக்கு என்ன வேண்டும்?*

அந்தோணி: *ஓ! பேசும் அகராதியா, மிக்க மகிழ்ச்சி. எங்களுக்குக் 'குவலயம்' என்னும் சொல்லுக்குப் பொருள் வேண்டும்.*

அகராதி: *குவலயம் என்றால் உலகம். வையம், ஞாலம், புவி, புவனம், அகிலம், அண்டம், பார், தரணி, பூமி ஆகிய சொற்களும் உலகம் என்னும் பொருளைத்தான் குறிக்கின்றன.*

அப்துல்லா: *அப்படியா! வியப்பாக உள்ளதே! உலகம் என்பதற்கு இத்தனை சொற்கள் இருக்கின்றனவா! அகராதியே! உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளோம். உன் தோற்றம் குறித்துச் சொல்வாயா?*

அகராதி: *ஓ! சொல்வேனே! அகரம், ஆதி என்னும் இரு சொற்களின் சேர்க்கையே நான். ஆதி என்பதற்கு முதல் என்னும் பொருளும் உண்டு. ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் அகர வரிசையில் அமையும்படி தொகுத்து விளக்கும் நூல்தான் நான். என்னை அகரமுதலி எனவும் கூறுவர்.*

அமுதா: *அகராதியே! அயல்நாட்டவர்தாம் உன்னைத் தமிழுக்கு அறிமுகம் செய்தனரா?*

அகராதி: *இல்லை! இல்லை! தமிழில் சொல்லுக்குச் சொல் பொருள் விளக்கம் செய்யும்முறை தொல்காப்பியர் காலத்திலேயே தொடங்கிவிட்டது. தொல்காப்பியர், உரியியலில் பல சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார் என்பது உங்களுக்குத் தெரியுமா?*

அந்தோணி: *அப்படியா! எங்களுக்குத் தெரியாதே. சரி, இதற்கு ஓர் எடுத்துக்காட்டைச் சொல்லேன்.*

அகராதி: *மாணாக்கர்களே! தொல்காப்பியர்,*

'செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்'

என்ற நூற்பா மூலம் எளிதாகப் பொருள் விளக்கம் தருகிறார். அஃதாவது, செழுமை என்பது, வளமையையும் கொழுப்பு என்னும் பண்பையும் குறித்து வரும். மற்றோர் எடுத்துக்காட்டும் கூறுகிறேன். கேளுங்கள். 'ஐ வியப்பாகும்' என்பது ஒரு நூற்பா.

குழந்தைகள் வியப்பிற்குரிய பொருளைக் கண்டால் 'ஐ'யென ஒலி எழுப்புவது இயற்கையல்லவா? இந்த உரிச்சொல்லுக்குத்தான் தொல்காப்பியர் பொருள் விளக்கம் தருகிறார்.

அப்துல்லா: *ஓ! அப்படியென்றால், தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லுக்குப்*

பொருள் காணும்செயல்பாடு தொடங்கிவிட்டது. சரி, அகராதி என்ற சொல் தமிழில் எப்பொழுது பயன்பாட்டிற்கு வந்தது?

அகராதி: தமிழில் முதன்முதலாக அகராதி என்ற சொல்லைப் பயன்படுத்திய நூல், 1594இல் எழுதப்பட்ட 'அகராதி நிகண்டு' என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் சிதம்பரத்தில் வாழ்ந்த இரேவணச்சித்தர் ஆவார்.

அமுதா: அப்படியா! ஆனால், 'நிகண்டு' என்று கூறினாயே? அந்தச் சொல்லுக்குப் பொருள் என்ன?

அகராதி: சொல்கிறேன். 'நிகண்டு' என்பது, வடசொல். இச்சொல்லுக்குத் தமிழில் சொற்றொகை, தொகுப்பு அகராதி, தொகையகராதி, தமிழ்ப்பா அகராதி, தொகுதி, கூட்டம் எனப் பல பொருள்களுள்ளன. நிகண்டுகள், தமிழிலுள்ள சொற்களைப் பல்வேறு பகுப்புகளுக்குட்படுத்தி, அவற்றிற்குரிய பொருளைப் பாடல் வடிவில் தந்தன. முதலில் தோன்றிய நிகண்டு சேந்தன் திவாகரம். நிகண்டு நூல்களுள் சிறந்ததாகச் சூடாமணி நிகண்டைக் கூறுவர்.

அமுதா: நிகண்டு என்றால் என்னவென்று புரிந்துகொண்டோம். ஆனால், எனக்கோர் ஐயம். தமிழிலுள்ள சொற்களைப் பல்வேறு பகுப்புகளுக்கு உட்படுத்துதல் என்று கூறினாயே, அப்படி என்றால் என்ன?

அகராதி: சொல்கிறேன். தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம் முதலான பன்னிரு பெயர்த்தொகுதியில், தமிழிலுள்ள சொற்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாகச் சூடாமணி நிகண்டில், விலங்குகளின் இளமைப்பெயரை அறிய விரும்பினால், முதலில் விலங்கின் பெயர்த்தொகுதியைக் காண வேண்டும். பின்னர், விலங்கின் பிள்ளைமரபு என்னும் தலைப்பில் இடம்பெற்றிருக்கும் பல்வேறு விலங்குகளுக்குரிய இளமைப்பெயர்களைக் காணலாம். பறழ், பிள்ளை, குட்டி, குழவி, பார்ப்பு, குருளை, கன்று, மறி, போதகம் என்பனவெல்லாம் விலங்கின் இளமைப்பெயர்களே. அதுமட்டுமன்று, அப்பெயர்களுக்குரிய விலங்குகள் எவையெவை என்பதும் கொடுக்கப்பட்டிருக்கும்.

அந்தோணி: அடடே! இதுபோன்று ஒரு சொல்லுக்குரிய பல பெயரையும் அறிந்துகொண்டால், எங்கள் பேச்சிலும்

அறிவோம் தெளிவோம்

அகராதி வகைகள்	
சிறுவர்க்கான அகராதிகள்	வணிகச் சொல் அகராதிகள்
எதுகை மோனை அகராதிகள்	கணினிச் சொல் அகராதிகள்
மரபுத்தொடர் அகராதிகள்	மருத்துவச் சொல் அகராதிகள்
வட்டாரவழக்கு அகராதிகள்	அலுவலகப் பயன்பாட்டுச் சொல் அகராதிகள்
கலைச்சொல் அகராதிகள்	ஆட்சிமொழி அகராதிகள்
பழமொழி அகராதிகள்	இணைய அகராதிகள்
மேற்கோள் அகராதிகள்	பொறியியற் சொற்சார்ந்த அகராதிகள்
ஒரு பொருட் பன்மொழி அகராதிகள்	தத்துவம்சார் அகராதிகள்
எதிர்ச்சொல் அகராதிகள்	சமயக் கருத்துசார்ந்த அகராதிகள்
ஒலிக்குறிப்பு அகராதிகள்	இலக்கியவியல் சார்ந்த அகராதிகள்
ஒலிப்பு அகராதிகள்	அயற்சொல் அகராதிகள்

11th Advance Tamil - FINAL.indd 158 14-02-2019 17:28:15

எழுத்திலும் பல சொற்களைப் பயன்படுத்துவோம், அல்லவா?

அகராதி: *உண்மைதான். சரியாகச் சொன்னீர்கள். உங்கள் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ள இதுவே சிறந்த வழி.*

அப்துல்லா: *அப்படியே செய்வோம். அண்மையில் பள்ளி சார்பாக எங்களைப் புத்தகக் கண்காட்சிக்கு அழைத்துச் சென்றனர். அங்குச் சதுரகராதி என்னும் பெயருடைய ஒரு நூலைப் பார்த்தோம். அதுவும் அகராதிதானோ?*

அகராதி: *ஆம். இந்தச் சதுரகராதியை உருவாக்கியவர் வீரமாமுனிவர். இவர், இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டன்டின் ஜோசப் பெஸ்கி. இவர் சதுரகராதியினை 1732ஆம் ஆண்டு தொகுத்தார். 'சதுர்' என்பதற்கு நான்கு என்பது பொருள். இந்நூலுள் பெயர், பொருள், தொகை, தொடை என்னும் வரிசைமுறையில் நான்காகப் பகுத்துச் சொற்களுக்குப் பொருள் விளக்கம் தந்துள்ளார்.*

வீரமாமுனிவர்

அமுதா: *வீரமாமுனிவரைப்போல அயல்நாட்டவர் வேறு யாரேனும் இப்பணியில் ஈடுபட்டனரா?*

அகராதி: *ஆம். வீரமாமுனிவரைப் பின்பற்றி ஐரோப்பியர் பலர் தமிழ் அகராதிகளை உருவாக்கியுள்ளனர். அவர்களுள் பெப்ரீசியஸ், இராட்லர், வின்சுலோ, பெர்சிவல், ஜியு. போப் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.*

அந்தோணி: *இவர்கள் மட்டும்தான் அகராதியை உருவாக்கினார்களா?*

அகராதி: *இல்லை, இல்லை. நான் அப்படிக் கூறவில்லை. அயல்நாட்டவர் மட்டுமல்ல, தமிழர்களும் அகராதிகளைத் தொகுத்துள்ளனர். சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பெற்ற தமிழ்ப்பேரகராதி (தமிழ் லெக்ஸிகன்) குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகராதியில், சொல்லுக்கான விளக்கங்கள் ஏழு கூறுகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.*



அப்துல்லா: *அப்படியா? அவை என்னென்ன?*

அகராதி: *சொல்கிறேன். அவை, 1. சொல் 2. சொல்லின் ஆங்கில ஒலிபெயர்ப்பு 3. இலக்கணப் பாகுபாடு 4. சொல்லின் தோற்றம் 5. இனச்சொற்கள் 6. தமிழிலும், ஆங்கிலத்திலும் சொல்லுக்குரிய பொருள் 7. சொற்பொருளுக்கேற்ற இலக்கிய மேற்கோள்கள் என அமைந்திருக்கும். ஏழாவதாகக் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள் வாயிலாக, அந்தச்சொல் எந்தெந்த இலக்கியத்தில் என்னென்ன பொருள்களில் வந்துள்ளது என அறிந்துகொள்ளச் செய்வதும் இவ்வகராதியின் சிறப்பு.*

அந்தோணி: *ஒரே சமயத்தில் பல விவரங்களை அறிந்துகொள்ளலாம் போலிருக்கிறதே! அந்த அகராதியைப் பார்க்க விரும்புகிறோம்.*

அகராதி: *இந்த நூலகத்திலும் காணலாம். இது, ஆறு தொகுதிகளாக வெளியிடப்பெற்றுள்ளது.*

அப்துல்லா: *அகராதிகளையும் நிகண்டுகளையும் தெரிந்துகொண்டோம். இவையன்றி நாங்கள் பயன்படுத்துவதற்கு வேறு பார்வை நூல்கள் உள்ளனவா?*

தெரியுமா?

அகராதிகள்

சதுரகராதி – வீரமாமுனிவர்

தமிழ் – ஆங்கில அகராதி - பெப்ரீஷியஸ்

பட அகராதி – இராமநாதன்

தமிழ்ச்சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதி – ஞானப்பிரகாச அடிகள்

திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி – பரோ, எமினோ

பழமொழி அகராதி – பெர்சிவல்

நிகண்டுகள்

திவாகரம் – திவாகரர்

பிங்கல நிகண்டு - பிங்கலர்

சூடாமணி நிகண்டு – மண்டல புருடர்

அகராதி நிகண்டு – சிதம்பர ரேவண சித்தர்

கயாதர நிகண்டு – கயாதரர்

உரிச்சொல் நிகண்டு – காங்கேயர்

அகராதி: ஏன் இல்லை? கலைக் களஞ்சியங்கள் உள்ளனவே.

அமுதா: கலைக்களஞ்சியங்களா? அப்படி என்றால் என்ன?

அகராதி: 'செய்திகளைத் தொகுத்துத் தரும் பார்வை நூல்களைத்தான் கலைக்களஞ்சியம்' என்கிறோம். அறிஞர்கள், புலவர்கள், தலைவர்கள் ஆகியோர்தம் வரலாறுகள், தாவரங்கள், விலங்குகள் பற்றிய செய்திகள், புகழ்பெற்ற இடங்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் தொடர்பான விவரங்கள் ஆகிய அனைத்துச் செய்திகளையும் உங்களுக்குத் தொகுத்துத் தரக்கூடிய நூல்கள் கலைக்களஞ்சியங்களே.

அமுதா: எங்கள் அறிவியல் ஆசிரியர், அறிவியல் கலைக்களஞ்சியம் என்ற நூலைப்பற்றிக் கூறியிருப்பது எனக்கு நினைவுக்கு வருகிறது.

அகராதி: ஆம். நான் ஏற்கெனவே கூறியதுபோல அறிவியல் தொடர்பான செய்திகளையெல்லாம் அந்தக் கலைக்களஞ்சியத்தில் நீங்கள் அறிந்து கொள்ளலாம். தமிழிலும் 'அபிதான சிந்தாமணி' என்ற கலைக்களஞ்சியம் உள்ளதே, உங்களுக்குத் தெரியுமா? இந்நூலில் புலவர்கள், பழம்பெரு இலக்கியங்கள், இலக்கியக் கதைமாந்தர்கள், கோவில்கள் ஆகியன பற்றிய விவரங்களும் செய்திகளும் நிறைந்துள்ளன.

அமுதா: தற்காலத்தில் கணினி பல துறைகளிலும் தடம் பதித்துள்ளது. அந்த வகையில் கணினித் துறையில் அகராதியின் பங்கு குறித்து அறிய விரும்புகிறோம்.

அகராதி: தமிழில் இன்று வெளிவந்துள்ள கணிப்பொறி மென்பொருள்கள் தம்முள் அகராதியினையும் கொண்டுள்ளன. கணினியில் தட்டச்சு செய்யும்போது, சரியான சொற்களுக்கான பரிந்துரைகளை இத்தகு அகராதிகள் தருகின்றன.

அமுதா: அகராதியே! இக்கால மக்களும் பண்டைய இலக்கிய இலக்கணங்களின் சொல்வளம், பொருளாழம் போன்றவற்றைத் தெளிவாக அறிந்து, சுவைத்து, மகிழத் துணை செய்வன அகரமுதலிகளே என்பதனை நன்கு உணர்ந்து கொண்டோம்.

அறிவியல் வளர்ச்சி எத்துணை விரைவாக இருந்தாலும் ஒரு மொழியின் உயிர், அதனைப் பேசும் மக்களிடத்தில்தான் உள்ளது என்பதையும் நன்றாகத் தெரிந்து கொண்டோம்.

மேலும், தாய்மொழியில் நிறைய சொற்களைத் தெரிந்து வைத்திருப்போர்க்குக் கல்விப்பயிற்சி மிகவும் எளிமையானதாக அமையும் என்பதையும் புரிந்து கொண்டோம்.

அந்தோணி: அதுமட்டுமா? ஒரு மொழியின் சொல்வளங்காட்டும் கண்ணாடியே அகராதி என்பதையும் உணர்ந்துகொண்டோம்.

அப்துல்லா: நாங்கள் ஒரு சொல்லுக்கான பொருளைத்தான் தேடி வந்தோம். ஆனால், ஒரு கட்டுரை எழுதுவதற்குரிய முழுமையான செய்திகளைப் பெற்றுள்ளோம். அகராதியே! உன்னுடன் கலந்துரையாடியதை எண்ணி, நாங்கள் மிகவும் மகிழ்கிறோம். நன்றி வணக்கம்.

அகராதி: நானும் மகிழ்கிறேன். நன்றி. மீண்டும் சந்திப்போம்.

11th Advance Tamil - FINAL.indd 160 14-02-2019 17:28:16

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சரசுவதி மகால் நூலகம் அமைந்துள்ள இடம்---------.

   அ) சென்னை ஆ) திருச்சி இ) தஞ்சாவூர் ஈ) மதுரை

2. நிகண்டு என்பதன் பொருளைத் தராத சொல்--------.

   அ) தொகுப்பு அகராதி ஆ) தொகையகராதி

   இ) தமிழ்ப்பா அகராதி ஈ) இணைய அகராதி

3. 'பிள்ளை' என்னும் இளமைப்பெயர் கொண்ட விலங்கு-------.

   அ) முயல் ஆ) அணில் இ) எலி ஈ) குதிரை

4. 'நிலவு' என்னும் பொருள் தராத சொல்---------.

   அ) சந்திரன் ஆ) மதி இ) திங்கள் ஈ) ஞாயிறு

5. சதுரகராதியின் சொற்பொருள் விளக்க வரிசைமுறை

   அ) பெயர், பொருள், தொகை, தொடை ஆ) பெயர், தொடை, தொகை, பொருள்

   இ) பெயர், பொருள், தொடை, தொகை ஈ) பெயர், தொகை, தொடை, பொருள்

குறுவினா

1. அகராதி – பெயர்க்காரணம் தருக.
2. குவலயம் என்னும் பொருள் தரும் பல சொற்கள் யாவை?
3. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசையில் எழுதுக.

   இயற்கை, இன்பம், இல்லுறை, இந்திரவிழா, இளவேனில், இருதிணை, இசைத்தமிழ்

4. பல்துறை அகராதிகளுள் நான்கனைக் குறிப்பிடுக.
5. தொல்காப்பியர் காலத்திலேயே சொல்லுக்குச் சொல் பொருள் விளக்கம் கூறும் முறை இருந்தமைக்குச் சான்று தருக.

சிறுவினா

1. நிகண்டு நூல்களின் அமைப்பை விளக்குக.
2. கலைக்களஞ்சியம் என்றால் என்ன? விளக்குக.
3. சதுரகராதி – குறிப்பு வரைக.
4. தமிழ்ப்பேரகராதியில் சொற்பொருள் விளக்கம் எவ்வாறு அமைந்துள்ளது?
5. அபிதான சிந்தாமணி – குறிப்பு வரைக.

நெடுவினா

1. ஒரு மொழியின் சொல்வளம் காட்டும் கண்ணாடியே அகராதி' – இக்கூற்றை மெய்ப்பிக்க.
2. கணினித்துறையில் அகராதியின் பங்கு குறித்து எழுதுக.

11th Advance Tamil - FINAL.indd 161 14-02-2019 17:28:16

உரையாடல்

மொழிபெயர்ப்புக் கலை

வானொலி ஒலிபரப்பு

கல்வி நிகழ்ச்சி – நேர்காணல்

பங்கேற்பாளர்கள் : நேர்காணல் நிகழ்த்துபவர், ஆசிரியர் கவின்மலர், மாணாக்கர்

நேர்காணல் நிகழ்த்துபவர்: வணக்கம், அம்மா. வானொலிக் கல்வி நிகழ்ச்சிக்காக வருகைதரும் உங்களைப் பள்ளி மாணாக்கர்கள் சார்பில் வரவேற்கிறோம். பல்துறையிலும் வேலைவாய்ப்பு அளிக்கின்ற மொழிபெயர்ப்புக் கலையைப்பற்றி இன்று உரையாட உள்ளோம். உங்களுடன் மாணாக்கர்களும் தொடர்புகொண்டு பேசுவர்.

ஆசிரியர்: அனைவருக்கும் வணக்கம். இந்நிகழ்ச்சி வாயிலாக, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. 'பிறமொழிச் சாத்திரங்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்னும் பாரதியாரின் பாடலுடன் இந்நிகழ்ச்சியைத் தொடங்கலாமா? மொழிபெயர்ப்பு என்பது, ஓர் அரிய கலை. அதன் நுட்பங்களை உணர்ந்து மொழிபெயர்ப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நே. கா. நி: மொழிபெயர்ப்பு என்றால் என்ன? விளக்கமாகக் கூறுங்கள்.

ஆசிரியர்: ஒரு மொழியில் இருக்கின்ற செய்தியை வேறு மொழிக்கு மாற்றுவது மொழிபெயர்ப்பு. அவ்வாறு மொழிபெயர்க்கும்போது, முதல்மொழிக்கு நிகரான செய்தி, இரண்டாவது மொழியிலும் இடம்பெற வேண்டும்.

நே. கா. நி: முதல் மொழி என்று எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?

ஆசிரியர்: சொல்கிறேன். ஒரு பாடலை மொழிபெயர்க்க வேண்டுமெனில், அப்பாடல் இடம்பெற்றுள்ள மொழிதான் முதல்மொழி. அதனை மூலமொழியெனவும் தருமொழியெனவும் கூறலாம். அந்தப்பாடலை எந்த மொழிக்கு மொழிபெயர்க்கப் போகிறோமோ அஃது இரண்டாவது மொழி. இதனைப் பெறுமொழியெனவும் இலக்கு மொழியெனவும் சொல்லலாம்.

நே. கா. நி: நிகரான செய்தி என்று சொன்னீர்களே, கொஞ்சம் விளக்குங்கள்.

ஆசிரியர்: நிகர் என்பதற்கு நேரான அல்லது ஒப்பான என்று பொருள். நிகரான செய்தி என்பது, தருமொழியில் இருக்கின்ற சொல் அல்லது தொடருக்கு ஒப்பாகப் பெறுமொழியில் இருக்கின்ற சொல் அல்லது தொடர் என்று பொருள்.

நே. கா. நி: அப்படியா, ஓர் எடுத்துக் காட்டுடன் விளக்குங்கள்.

ஆசிரியர்: தமிழ் தெரிந்த ஒருவரை நோக்கி, "ஐயா, உட்காருங்கள்" என்று சொன்னால் உட்காருவார். ஆனால், ஆங்கிலம் மட்டும் தெரிந்தவர் பொருள் புரியாமல் விழிப்பார். அவருக்கு அருகிலிருப்பவர், 'please take your seat' என்று மொழிபெயர்த்துச் சொன்னால் புரிந்துகொள்வார்.

உட்காருங்கள் என்று சொல்வதும் 'please take your seat' என்று சொல்வதும் ஒரே பயனைத்தான் கொடுக்கும். அதனால், இவ்விரு தொடரும் ஒன்றுக்கொன்று நிகர் (Equivalent).

11th Advance Tamil - FINAL.indd 162 14-02-2019 17:28:16

நே. கா. நி : மாணாக்கர்களுக்குப் புரியும்படி விளக்கினீர்கள். இதோ, மாணாக்கர் ஒருவர் நம்முடன் தொடர்பு கொள்ள வருகிறார்.

மாணாக்கர்: வணக்கம் அம்மா. என் பெயர் நளன். நான், அரசுப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன். 'Translation' என்னும் சொல் எந்த மொழியிலிருந்து வந்தது?

ஆசிரியர் : 'Translatio' என்னும் சொல், இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது. அதற்குக் 'கொண்டு சொல்லுதல்' என்று பொருள். தருமொழியில் இருக்கின்ற பொருளை அதற்கு இணையான பெறுமொழியில் உரைப்பது என்றும் சொல்லலாம். அவ்வாறு செய்யும்போது, செய்தியைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது. பொருள் மாறாமல் இருக்கவேண்டும். மொழிபெயர்க்கும் செயலில் தழுவல், சுருக்கம், மொழியாக்கம், நேர் மொழிபெயர்ப்பு என நான்கு வகையுண்டு.

நே. கா. நி : அவற்றைப்பற்றி விளக்கமாகக் கூறுங்கள்.

ஆசிரியர் : தழுவல் என்பது, நேரடியாக மொழிபெயர்க்காமல், மூலமொழிச்செய்தியைப் புரிந்துகொண்டு தழுவி எழுதுவதாகும். எடுத்துக்காட்டாக, வால்மீகி இராமாயணத்தைத் தழுவித் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்றாற்போல் கம்பர் எழுதிய இராமாயணத்தைச் சொல்லலாம். சுருக்கம் என்பது, படைப்பைச் சுருக்கி அறிமுகப்படுத்தும் நிலை. இதில் பொருத்தப்பாடு, கருத்துச் சிதையாமை, கோவை ஆகியனவற்றை அடிப்படையாகக்கொண்டு, கொஞ்சம் கட்டுப்பாடின்றி எழுதலாம். ஒரு கவிதையைக் கவிதையாகவும் உரைநடையாகவும் மொழிபெயர்ப்பது மொழியாக்கம். மூலமொழிச் செய்தியிலிருந்து சிறிதும் வழுவாமல் மொழிபெயர்ப்பது, நேரடி மொழிபெயர்ப்பு.

அறிவோம் தெளிவோம்

தொல்காப்பியர் கூறும் மொழிபெயர்ப்பு விதி

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்படை யாத்தலோடு அனைமர பினவே
– தொல். பொருள். மரபு 652

வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே
– தொல். சொல். எச்சம் 401

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்
– தொல். சொல். எச்சம் 402

நே. கா. நி : தமிழில் மொழிபெயர்ப்பைப் பற்றிய குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

ஆசிரியர் : உண்டு. பழந்தமிழ் நூலான தொல்காப்பியம், மொழிபெயர்ப்புபற்றி விளக்கியுள்ளது. இதில் தொல்காப்பியர், மரபுநிலையறிந்து, அந்த மொழிவழக்குக்கு ஏற்றாற்போல் மொழிபெயர்க்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

நே. கா. நி : தொல்காப்பியர், எந்த மொழியிலிருந்து மொழிபெயர்க்க விதி கூறியுள்ளார்?

ஆசிரியர் : வடமொழிச் சொற்களைத் தமிழில் பயன்படுத்த வேண்டிய சூழலில், வடமொழியிலிருக்கின்ற சிறப்பெழுத்துகளை நீக்கிவிட்டுத் தமிழ் எழுத்திலேயே எழுதவேண்டுமென்றும், வடசொல்லின் வடிவம் சிதைந்தாலும் வடமொழிச் சொல்லாகவே கருத வேண்டுமென்றும் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக, 'வருஷம்' என்பது, வடமொழிச்சொல். இதற்கு நேரடியான தமிழ்ச்சொல் 'ஆண்டு'. ஆனால், அந்த வடசொல்லையே தமிழில் பயன்படுத்த வேண்டுமென்றால், அந்த மொழியின் சிறப்பெழுத்தான 'ஷ' என்னும் வடமொழி எழுத்தை நீக்கி, 'ட' என்னும் தமிழ் எழுத்தைச் சேர்த்து, வருடம் என எழுதவேண்டுமெனக் கூறுகிறார்.

நே. கா. நி : வடமொழியிலிருந்து மொழிபெயர்க்க, மாணாக்கர்க்கு ஒரு சொல் கொடுங்களேன்.

11th Advance Tamil - FINAL.indd 163 14-02-2019 17:28:16

ஆசிரியர்: *பிரசங்கம், பிரச்சாரம் ஆகிய வடமொழிச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் சொல்லுங்கள்.*

நே. கா. நி: *அம்மா, மாணாக்கர் விடை தேடுவார்கள். நாம் தொடர்ந்துபேசலாம். மொழிபெயர்ப்பு எப்படி இருக்க வேண்டுமென நினைக்கிறீர்கள்?*

ஆசிரியர்: *மொழிபெயர்ப்பில் பொருள் பொருத்தப்பாடுதான் முதன்மையானது. அதனால், மூலமொழியின் செய்தியைப் புரிந்துகொண்டுதான் மொழிபெயர்க்க வேண்டும்.*

நே. கா. நி: *ஓர் எடுத்துக்காட்டு சொல்லுங்களேன்.*

ஆசிரியர்: *சில இடங்களில் அழகுக்காகப் புற்றரை (புல் தரை) வளர்த்திருப்பார்கள். அங்கு, ஓர் அறிவிப்புப் பலகையும் வைத்திருப்பார்கள். அதில், 'Keep off the Grass' என ஆங்கிலத்திலும், 'புல்தரைமேல் நடக்காதீர்கள்' எனத் தமிழிலும் எழுதப்பட்டு இருக்கும்.*

நே. கா. நி: *ஆமாம். நான்கூடப் பார்த்திருக்கிறேன்.*

ஆசிரியர்: *புல்தரைமேல் நடக்காதீர்கள் என்றால், புல்தரைக்கு உள்ளே நடக்க வேண்டுமெனப் பொருளாகிவிடும், அல்லவா? புல்தரையில் நடக்காதீர்கள் என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பு.*

நே. கா. நி: *புரிகிறது, அம்மா. இதோ, மீண்டும் மாணாக்கர் ஒருவர் நம்முடன் தொடர்புகொள்ள வருகிறார்.*

மாணாக்கர்: *வணக்கம், அம்மா. என் பெயர் அமுதன். வடசொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் கேட்டீர்களே, பிரசங்கம் என்பது, சொற்பொழிவு; பிரச்சாரம் என்பது, பரப்புரை. நான் சொன்னது சரியா?*

ஆசிரியர்: *சரியாகச் சொன்னீர்கள் தம்பி. சரியான புரிதலோட மொழி பெயர்த்திருக்கிறீர்கள். மேலும், இவைபோன்ற வடசொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் அறிய, பேராசிரியர் நீலாம்பிகை அம்மையாரின்*

தெரியுமா?

மொழிபெயர்ப்பில் மரபின் இன்றியமையாமை

செந்தமிழ் மொழியில் பெருமதிப்புக் கொண்டு, அதனை ஐயந்திரிபறக் கற்று, இலக்கண இலக்கிய நூல்களை ஆக்கியவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் ஆவார். அவர் தமிழைக் கற்கத்தொடங்கிய காலத்தில், அதன் மரபு தெரியாது "கோழி தன் குட்டிகளைக் காப்பதுபோல்" என்று தம் சொற்பொழிவில் கூற, கோவில் வழிபாட்டிற்காகக் கூடியிருந்த அத்தனை பேரும் சிரித்தனர். வீரமாமுனிவர், சிரிப்பின் காரணத்தைக் கேட்டறிந்தார். தாம் செய்த பிழையை உணர்ந்தார்; தமிழை நன்கு கற்றார்; தமிழில் புலமை பெற்றார்; தமிழ் மரபைப் போற்றினார். (*'கோழி தன் குஞ்சுகளைக் காப்பதுபோல்' என்பதே மரபு.*)

'வடசொல் தமிழ் அகரவரிசைச் சுருக்கம்', என்னும் நூல் உங்களுக்கு மிகவும் பயன்படும்.

நே. கா. நி: *மாணாக்கர்களே, நூற்பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள். அம்மா! சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கக் கூடாது என்று சொல்கிறார்களே, ஏன்?*

ஆசிரியர்: *நல்ல வினா கேட்டீர்கள். எடுத்துக்காட்டுடன் சொன்னால் எளிதாகப் புரியும். 'Fish Seed' என்னும் ஆங்கிலச் சொற்றொடரைத் தமிழில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் என்ன ஆகும் என்று பார்ப்போமா? Fish என்றால் மீன். Seed என்றால் விதை. அதனை மீன் விதை என்று சொல்லலாமா?*

நே. கா. நி: *நீங்களே சொல்லுங்களேன்.*

ஆசிரியர்: *மீன் விதையை வாங்கிக் குழிபறித்து நட்டால் மீன் மரமா முளைக்கும்? சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தால் எவ்வளவு இடர்ப்பாடு ஏற்படுகிறது எனப் பார்த்தீர்களா? அதனால், மொழிக்கான மரபைத் தெரிந்துகொண்டு, மொழிபெயர்க்க வேண்டியது இன்றியமையாதது. அந்த ஆங்கிலச் சொற்றொடரைத் தமிழில் 'மீன்குஞ்சு' என்று*

11th Advance Tamil - FINAL.indd 164 14-02-2019 17:28:16

மொழிபெயர்ப்பதுதான் சரியாக இருக்கும். இன்னொரு தொடரைச் சொல்கிறேன்.

நே. கா. நி: சொல்லுங்கம்மா. மொழி பெயர்ப்பதில் கவனம் தேவை என்பதை மாணாக்கர் புரிந்துகொள்வார்கள் .

ஆசிரியர்: 'High court bench' என்றொரு தொடர் இருக்கிறது. அதனை 'high Court' என்றால் உயர்நீதிமன்றம், 'bench' என்றால் இருக்கை எனச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்து, உயர்நீதிமன்ற இருக்கை எனச் சொல்லலாமா?

நே. கா. நி: இல்லை, 'உயர்நீதிமன்ற அமர்வு' என்றுதான் மொழிபெயர்க்க வேண்டும். அம்மா, நான் சொன்னது சரிதானே?

ஆசிரியர்: சரியாச் சொன்னீர்கள். அதனால், மொழிபெயர்ப்பாளருக்குத் துறைவாரியான கலைச்சொல் தெரிந்திருக்க வேண்டும் என்பது புரிகிறதல்லவா?

நே. கா. நி: நன்றாகப் புரிகிறதம்மா. மாணாக்கர்களுக்கு, ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்க ஒரு தொடர் கொடுங்கள்.

ஆசிரியர்: 'Trained staff', 'Training Staff'. இத்தொடர்களை மொழிபெயர்க்கச் சொல்வோம்.

நே. கா. நி: மாணாக்கர் விடை தேடட்டும். நாம்தொடர்ந்து பேசலாம். பண்பாடு தொடர்பான சொற்களை மொழிபெயர்ப்பதனைப் பற்றிச் சொல்லுங்களேன்.

தெரியுமா?

மொழிபெயர்ப்பு வகைகள்

பத்திரிகை மொழிபெயர்ப்பு

விளம்பர மொழிபெயர்ப்பு

வானொலி மொழிபெயர்ப்பு

கணிப்பொறி மொழிபெயர்ப்பு

இலக்கிய மொழிபெயர்ப்பு

அறிவியல் மொழிபெயர்ப்பு

ஆசிரியர்: பண்பாட்டுச் சொற்களை ஒலிபெயர்ப்பு செய்தாலே போதும். தாலி (thali), கோலம் (kolam) முதலான சொற்களைச் சொல்லலாம். இவைபோன்ற சொற்களை மொழிபெயர்ப்புக்குள் விளக்கினால் பொருளோட்டத்துக்குத் தடையாக இருக்கும். அதனால், கதையோட்டத்தில் தனியாக விளக்கவேண்டும்.

நே. கா. நி: அதனைப்பற்றி விளக்கமாகச் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: ஆங்கிலத்தில 'Glossary' என்று சொல்வார்கள். தமிழில் 'அருஞ்சொல் அகரமுதலி' என்று சொல்லலாம். 'Kolam' என்னும் சொல்லை ஆங்கிலத்தில்

"kolam – A simple and sometimes elaborate pattern drawn in front of the house with white powder of rice flour – a symbol of auspiciousness". என்று சொல்லவேண்டும்.

நே. கா. நி: மாணாக்கர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனைத் தமிழிலும் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: கோலம் என்பது, தமிழ்ப் பண்பாடு சார்ந்தது. இதனை வீட்டுக்குமுன் வாசலில் அழகுக்காக வரைவர். இது சிக்கல் கோலமா, பூக்கோலமா என்பதை நாம்தான் விளக்கவேண்டும். அரிசிமாவில் வரைவதாகவும் எறும்புமாதிரியான உயிரினங்களுக்கு உணவு தருவதாகவும் விளக்கலாம்.

நே. கா. நி: ஓ! அப்படியா! நன்கு புரியும்படி சொன்னீர்கள். இதோ, மாணாக்கர் ஒருவர் தொடர்புகொள்ள வருகிறார்.

மாணாக்கர்: வணக்கம், அம்மா. என் பெயர் இளம்பிறை. நீங்கள் மொழிபெயர்க்கச் சொன்ன சொற்களைச் சொல்கிறேன். 'Trained Staff' என்றால் பயிற்சி பெற்ற அலுவலர். 'Training Staff' என்றால் பயிற்சி தரும் அலுவலர். நான் சொன்னது சரியா எனச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: சரியாகத்தான் சொல்லி இருக்கிறீர்கள். வாழ்த்துகள்.

அறிவோம் தெளிவோம்

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள கணியன் பூங்குன்றனாரின் பாடலும் அதற்குரிய மொழிபெயர்ப்பு உரையும்

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன,
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம், ஆதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

– கணியன் பூங்குன்றனார், புறம். 192

To us all towns are one, all men are our kin.

Life's good comes not from others gift, nor ill, likewise.

Pains and relief from pains are one's own.

Death's no new thing, nor our bosoms thrill when joyous life seems like a Luxion's draught nor in hate condemn it ill.

We seem this precious life of ours a ferry raft, borne on the waters of a mighty mountain stream and fight the boulders, mourning in vain, as laws ordain floating serves the raft.

Thus have we seen in vision of the wise we wonder not at greatness of the Great, still less despise us men of low state.

– *Rao Saheb K. Kothandapani,*
Controller of Emigration (Rtd.,)Madras.

நே. கா. நி: அம்மா, நாம் தொடர்ந்து பேசலாம். உறவுமுறைச் சொற்களை மொழிபெயர்க்கும்போது உண்டாகும் சிக்கலைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: நம் தாயுடன் பிறந்த ஆணைத் 'தாய்மாமன்' எனவும், தந்தையுடன் பிறந்த ஆணைச் 'சித்தப்பா', 'பெரியப்பா' எனவும் சொல்கிறோம். உறவுநிலையைச் சொல்ல, தமிழில் இவைபோன்று பல சொற்கள் உள்ளன. ஆனால், இச்சொற்களையெல்லாம் குறிக்க, ஆங்கிலத்தில் 'Uncle' என்று ஒரு சொல் மட்டுந்தான் இருக்கிறது. அதனால், உறவுமுறைச் சொல்லை மொழிபெயர்க்கும்போது கவனம் தேவை.

நே. கா. நி: ஒருவருடைய பெயரை மொழிபெயர்க்கலாமா?

ஆசிரியர்: சொல்கிறேன். எடுத்துக் காட்டாக, 'Sir.Franncis Day' என்னும் பெயரைச் 'சர். பிரான்சிஸ் நாள்' என மொழிபெயர்க்கக் கூடாது. ஒலிபெயர்ப்பு செய்யவேண்டும். 'Ramdeo sing' என்னும் பெயரை 'ராம்த்யோசிங்' என மொழிபெயர்க்காமல் 'ராம்தேவ்சிங்' என மொழிபெயர்க்க வேண்டும். கம்பர்கூட 'லக்ஷ்மன்' என்ற பெயரை 'இலக்குவன்' என்று ஒலிபெயர்ப்பு செய்துள்ளார்.

நே. கா. நி: ஒலிபெயர்ப்பு என்று சொல்கிறீர்களே, அதனைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: ஊர்ப் பெயர், கண்டுபிடிப்பு, உறவுச் சொற்கள் முதலியவற்றையெல்லாம் ஒலிபெயர்ப்புத்தான் செய்யவேண்டும். புதிதாகக் கண்டுபிடிக்கும் அறிவியல் கருவிகளையும் சொற்களையும் உடனுக்குடன் மொழிபெயர்க்க முடியாதபோது, ஒலிபெயர்ப்பு செய்யலாம்.

நே. கா. நி: மாணாக்கர்களே! குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அம்மா, திருவள்ளுவர் பற்றி மொழிபெயர்க்க ஒரு தொடர் கொடுங்களேன்.

ஆசிரியர்: 'திருவள்ளுவர் சிறந்த கவிஞர். அவர் எழுதிய திருக்குறள் மிகவும்

11th Advance Tamil - FINAL.indd 166 14-02-2019 17:28:16

புகழ்பெற்றது'. இந்த வரிகளை ஆங்கிலத்துக்கு மாற்றச் சொல்வோம்.

நே. கா. நி: மொழிபெயர்ப்பில் கலைச்சொல்லாக்கச் சிக்கலைப்பற்றிச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: கிரேக்க மொழியில் அரிஸ்டாட்டில் எழுதிய நூல் 'POETICS'. இதனைத் தமிழில், 'கவிதையியல்' எனப் பேராசிரியர் அ.அ. மணவாளன் மொழிபெயர்த்துள்ளார். அவர், கிரேக்கக் கலைச்சொற்கள் மிகவும் பழையனவாக இருந்தாலும், மிகவும் ஆழமானவை எனவும் அதற்கு ஏற்ற வடிவம் தமிழில் இல்லை எனவும் கூறியுள்ளார். கிரேக்கத்தில் கதை மாந்தர்களையும் அவர்களின் பண்புகளையும் 'Ethos' என்ற ஒரு சொல்லே குறிக்கிறது. ஆங்கிலத்திலும் 'Character' என்னும் ஒரு சொல், இரண்டையும் குறிக்கிறது. ஆனால், தமிழில் கதைமாந்தர் வேறு; கதைமாந்தர்களின் பண்புகள் வேறு. இதில் எந்தத் தடுமாற்றமும் வரக் கூடாது.

மாணாக்கர்: வணக்கம், அம்மா. என் பெயர் கவி. திருவள்ளுவரைப்பற்றிக் கேட்டீர்கள் அல்லவா? அதற்கான மொழிபெயர்ப்பு இதோ, 'Thirukural, written by the great poet thiruvalluvar, is very famous.

ஆசிரியர்: நன்றாகச் சொன்னீர்கள். திருக்குறள், உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யூ. போப், ஆங்கிலத்தில் திருக்குறளை மொழிபெயர்த்ததுபோல, பலர் மொழிபெயர்த்துள்ளனர். மத்திய செம்மொழி நிறுவனம் சார்பில், பதினெட்டுப்பேர் ஆங்கிலத்தில் சுருக்கமாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். செல்பேசியில்கூட ஆங்கிலத்தில் திருக்குறளைப் படிக்கும் வகையில் வெளியிட்டிருக்கிறார்கள். டாக்டர் கார்ல் கிரௌல் என்பார், திருக்குறளைச் செருமானிய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறளை மாண்டரின் (சீன) மொழியில் மொழிபெயர்ப்பதற்குத் தைவானைச் சேர்ந்த கவிஞர் யூஸி என்பவருக்கு, 77.4 இலட்சத்தைத் தமிழக அரசு வழங்கியுள்ளது.

நே. கா. நி: மரபுத்தொடர் மொழிபெயர்ப்புப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர்: 'கம்பி நீட்டினான்' என்பது, தமிழில் வழங்கும் ஒரு மரபுத்தொடர். இதனை மொழிபெயர்க்கும்போது, 'Lengthened the rod' என்று மொழிபெயர்த்தால், ஆங்கிலத்தில் படிப்பவர்களுக்குப் புரியாது. இதனை 'He boted away' என்றுதான் மொழிபெயர்க்க வேண்டும். 'Smell a rat' என்னும் ஆங்கில மரபுத்தொடரை 'எலியை மோந்து பார்' என எழுதக்கூடாது. அதன் பொருள், 'ஐயமுற்றான்' என்பதுதான். அதனால், அந்தந்த மொழியில் மரபுத்தொடர் உணர்த்தும் பொருளைப் புரிந்துகொண்டு மொழிபெயர்த்தல் வேண்டும்.

நே. கா. நி: மரபுத்தொடரை எப்படி மொழிபெயர்ப்பது என்று சொன்னீர்கள். பழமொழிகளை மொழிபெயர்ப்பதுபற்றியும் சொல்லுங்களேன்.

தெரியுமா?

உமர்கய்யாம் பாடல்கள் பாரசீகப் புலவரால் எழுதப்பட்டவை. அவற்றை எட்வர்டு பிற்செரால்டு என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவற்றைக் கவிமணி, தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

சுந்தர ராமசாமி தமிழில் எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை' என்னும் நாவலை Black went worth என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

சூத்திரகரின் 'மிருச்ச கடிகம்' என்ற வடமொழி நாடக நூலை 'மண்ணியல் சிறுதேர்' எனப் பண்டிதமணி மு.கதிரேசனார் மொழிபெயர்த்துள்ளார்.

11th Advance Tamil - FINAL.indd 167 14-02-2019 17:28:16

ஆசிரியர்: பழமொழியை மொழி பெயர்க்கும்போது, மொழிபெயர்க்கும் மொழியிலிருக்கின்ற ஒத்த வடிவத்தைத் தேடி எடுக்கவேண்டும். 'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்'என்ற பழமொழியை நேரடியாக மொழிபெயர்த்தால் '*The same leg will be repeatedly injured*' என்று தவறான பொருளைத் தந்துவிடும். அதனால், தமிழில் என்ன பொருளைத் தருகிறதோ, அதே பொருளில் ஆங்கிலத்திலும் '*sorrows never come in single*' என மொழிபெயர்க்கலாம்.

நே. கா. நி: அப்படியென்றால், நேரடியாக மொழிபெயர்ப்பதுபோலப் பழமொழி இல்லையா?

ஆசிரியர்: இருக்கிறது. 'எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றினாற்போல' என்பதற்கு நேரடிப் பொருளாக '*Adding fuel to the fire*' என்று எழுதலாம்.

நே. கா. நி: பழமொழியை மொழி பெயர்க்கும்போது, எதிர்கொள்ளக்கூடிய சிக்கலைப்பற்றிச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: பொதுமக்கள், வழக்கத்தில் பயன்படுத்துகின்ற சொல்லாக இருக்க வேண்டும். படித்தவுடன் எளிதாகப் பொருள் புரிதல் வேண்டும். முதலில் மொழிபெயர்த்த சொல், பொருந்தவில்லையெனில், திரும்பத் திரும்பச் சொற்களை மாற்ற வேண்டியதாக இருக்கும்.

நே. கா. நி: மொழிபெயர்ப்புச் சிக்கல் என எவற்றையெல்லாம் சொல்லலாம்?

தெரியுமா?

தமிழில் மொழிபெயர்ப்புக்கென வெளிவரும் இதழ், திசை எட்டும் அதன் ஆசிரியர் குறிஞ்சி வேலன்.

இணைய இதழ் www.thinnai.com தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, ஆங்கிலம் ஆகிய ஆறு மொழிகளில் வெளிவருகிறது.

ஆசிரியர்: மொழியின் தனித் தன்மை, தொடரமைப்பு மாறுபாடு, பண்பாட்டு இடைவெளி, உறவுமுறைச் சிக்கல், மரியாதை வழக்கு, இடக்கரடக்கல், மொழியியல் சிக்கல்கள், ஒருபொருட் பன்மொழி, பொருள் மயக்கம் இவையெல்லாம் மொழிபெயர்ப்புச் சிக்கலுக்குக் காரணமாக அமையும்.

நே. கா. நி: தமிழிலக்கியங்களை வேற்றுமொழி இலக்கியத்தோடு ஒப்பிட்டு மொழிபெயர்த்திருக்கிறார்களா?

ஆசிரியர்: இலக்கியங்கள் வாயிலாக அவற்றைப் படைத்த கவிஞர்களைக்கூட ஒப்பிட்டிருக்கிறார்கள். கம்பனுடன் மில்டனையும், பாரதிதாசனுடன் வோர்ட்ஸ்வொர்த்தையும் பேராசிரியர் அ. அ. மணவாளன் ஒப்பிட்டுள்ளார். அவை *Epic Heroism in Milton and kambar, The Exordium of Ramayanam and Milton's Paradise, Wordsworth and Bharathidasan* என்ற பெயரில் வெளிவந்துள்ளன. 'பாரதிதாசன் – கார்ல்சாண்ட்பர்க் ஓர் ஒப்பாய்வு' என்ற நூலை முனைவர் சண்முக. செல்வகணபதி எழுதியுள்ளார்.

பண்டைய தமிழ்ப் பாடல்களைக் கிரேக்கம் உட்பட பல்வேறு நாட்டு வீர உணர்ச்சிக் கவிதைகளுடன் ஒப்பிட்டு அறிஞர் க. கைலாசபதி '*Tamil Heroic Poetry*' என்ற ஆய்வுநூலை எழுதியுள்ளார். இதனை கு. வெ. பாலசுப்பிரமணியன் 'தமிழ் வீரநிலைக் கவிதை' என மொழிபெயர்த்துள்ளார்.

நே. கா. நி: அறிவியல் செய்திகளை எப்படி மொழிபெயர்க்கலாம்?

ஆசிரியர்: உலக அளவில், அறிவியல் குறியீடுகளைப் பயன்படுத்துவதில் பொதுத்தன்மைகள் உள்ளன. அறிவியலில் ஒவ்வொரு தனிமத்தையும் அதனுடைய இலத்தீன் பெயரின் முதலெழுத்து அல்லது முதலெழுத்துடன் அடுத்துவரும் எழுத்தையும்கொண்டு எழுதவேண்டும். *Hydrogen* என்பதை *H* என்று குறிப்பிட வேண்டும். கணிதத்தில் π என்ற குறியீட்டை அப்படியே குறிப்பிட வேண்டும். வேதிச்

11th Advance Tamil - FINAL.indd 168 14-02-2019 17:28:17

சமன்பாடுகளைக் குறிப்பிட SO_2, H_2O முதலான வாய்பாடுகள், ரோமன் எழுத்தில் எப்படி உள்ளதோ, அப்படியே தமிழிலும் பயன்படுத்த வேண்டும். தமிழில், புதிய சொல்லாக்க முயற்சியில் முன்னொட்டு, பின்னொட்டுகளை இணைத்துக் கலைச்சொல் உருவாக்குவது நடைமுறையில் உள்ளது. Meter என்பதை 'மானி' என மொழிபெயர்த்துப் பின்னொட்டாக வைத்து 'Electrometer – மின்மானி', 'Lactometer – பால்மானி', 'Thermometer – வெப்பமானி' எனப் புதிய கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நே. கா. நி: மொழி வளர்ச்சிக்கு இந்த மொழிபெயர்ப்பு எப்படிப் பயன்படுகிறது எனச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: வேற்றுமொழியில் காணப்படும் கருத்துவளர்ச்சி, நம் மொழியிலும் ஏற்படும். ஒரு நாட்டின் பண்பாட்டைப் புரிந்துகொள்ள முடியும். நம் இலக்கியத்தைப் பிறநாட்டு இலக்கியத்துடன் ஒப்பிட்டு ஆராயலாம். வணிக வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இருக்கும். ஒரு நாட்டில் கண்டுபிடித்த அறிவியல் செய்தி, மற்ற நாட்டுக்கும் பரவும். புகழ்பெற்ற நூல்களைப்பற்றியும், நூலாசிரியர்களைப்பற்றியும் தெரிந்துகொண்டு, பிறமொழி இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு நூல்களைப் படிக்க விரும்பலாம். தொழில்நுட்ப வளர்ச்சிக்குக்கூட மொழிபெயர்ப்பு உதவுகிறது.

நே. கா. நி: மொழிபெயர்ப்பினால் இவ்வளவு நன்மைகளா? வியப்பாக உள்ளது. இன்று பலதுறைகளிலும் கணினியின் பயன்பாட்டைக் காண்கிறோம். மொழிபெயர்ப்பில், கணினியின் பங்கு என்ன?

ஆசிரியர்: பக்கஅளவு மிகுந்த நூல்களை மொழிபெயர்க்க, நமக்குப் பல நாள்கள் ஆகின்றன. ஆனால், கணினி மிக விரைவாக மொழிபெயர்த்துவிடுகிறது. ஆயினும், அஃது ஓரளவு சிறிய அல்லது சில பிழைகளுடன் மொழிபெயர்க்கிறது. அங்கு, மொழிபெயர்ப்பாளரின் பங்கு தேவைப்படுகிறது. தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் கணினிவழி மொழிபெயர்ப்பு செய்கிறார்கள். இயந்திர மொழிபெயர்ப்பு (machine translation), மாந்தர் – கணினி உரையாடல் ஆகியவற்றைத் தமிழில் நிகழ்த்தமுடியும். 'இயற்கைமொழிப் பகுப்பாய்வு' (Natural Language Processing) என்னும் தொழில்நுட்பம் செயல்படும்போது, கணினியே மூளையாக இருந்து செயல்படும்.

நே. கா. நி: திறன்பேசியில் பயன்படும் தமிழ் மொழிபெயர்ப்புச் செயலியைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.

ஆசிரியர்: நாம் பேசுகின்ற பேச்சைக் கணினிக்குப் புரியும்படி உள்ளீடாக மாற்றிக் கூகுளில் இணையவழி மொழிபெயர்ப்பு செய்யும்முறை உள்ளது. திறன்பேசியில்கூட மொழிபெயர்க்கும்முறை வந்துவிட்டது. மைக்ரோ சாப்ட் நிறுவனத்தினர், தமிழ் மொழிபெயர்ப்புச் செயலி ஒன்றை உருவாக்கி உள்ளனர். இது, வேற்றுமொழியில் பேசுபவர்களின் பேச்சைத் தமிழ் எழுத்துகளில் தரும். தொடரைத் தந்தால், அதற்குரிய தமிழ்ச்சொல்லைக் கொடுக்கும். இந்தச்செயலி, அறுபது மொழிகளுக்கு இத்தகைய வாய்ப்பை வழங்குகிறது. குறிப்பிட்ட தொடரைப் பதிவு செய்து, எந்த மொழியில் மாற்றவேண்டுமெனப் பதிவு செய்கிறோமோ அந்த மொழிக்கு மாற்றித் தரும்.தற்போது, மிகஎளியசிறு வரியைமட்டுமே மொழிபெயர்க்கிறது. காரணம், தமிழின் இலக்கண அமைப்பும் சொற்களஞ்சியமும்தான். இந்த மென்பொருளைத் திறன்பேசியிலும், கணினியிலும் நிறுவலாம்.

நே. கா. நி: மொழிபெயர்ப்புபற்றி அரிய பல செய்திகளை எடுத்துக்காட்டுகளுடன் விரிவாகவும் விளக்கமாகவும் சொன்னீர்கள், அம்மா. இந்நிகழ்ச்சி, மாணாக்கர்க்கு நல்ல பயனைத் தரும் என்று உறுதியாகக் கூறலாம். எங்களுடன் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட உங்களுக்கும் நிகழ்ச்சியில் பங்குகொண்ட மாணாக்கர்க்கும் எங்கள் வானவில் பண்பலையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர்: இந்நிகழ்ச்சியில் நானும் பங்கேற்றதனைக் குறித்து மகிழ்கிறேன்.

மிக்க நன்றி.

கலைச்சொற்கள்

தொடரியல்

Active Voice	– செய்வினை
Adjective	– பெயரடை
Adverb	– வினையடை
Affirmative Sentence	– உடன்பாட்டுத் தொடர்
Analysis of Sentence	– தொடரைப் பகுத்தல்
Complex Sentence	– கலவைத் தொடர்
Compound Sentence	– கூட்டுத்தொடர்
Concord of Agreement	– இசைவு
Conjunctions	– இணைப்புச் சொற்கள்
Direct Speech	– நேர்க்கூற்று
Exclamatory Sentence	– உணர்ச்சித் தொடர்
Idiomatic Phrases	– மரபுத்தொடர் சொற்றொடர்கள்
Indirect Speech	– அயற்கூற்று
Interchange of Active and Passive	– செய்வினை – செயப்பாட்டுவினை மாற்றம்
Interrogative Sentence	– வினாத் தொடர்
Intransitive Verb	– செயப்படுபொருள் குன்றிய வினை
Main Clause	– முதன்மைத் தொடர்
Negative Sentence	– எதிர்மறைத் தொடர்
Object	– செயப்படுபொருள்
Order of Words	– சொல்முறை
Passive Voice	– செயப்பாட்டுவினை
Plural	– பன்மை
Predicate	– பயனிலை
Prefix	– முன்னொட்டுச் சொல்
Punctuation	– நிறுத்தக்குறி
Sentence	– தொடர்
Simple Sentence	– தனித்தொடர்
Singular	– ஒருமை
Subject	– எழுவாய்
Subordinate Clause	– சார்புத் தொடர்
Suffix	– பின்னொட்டுச் சொல்
Syntax	– தொடரியல்
Synthesis of Sentence	– தொடரைச் சேர்த்தல்

11th Advance Tamil - FINAL.indd 170 14-02-2019 17:28:17

The sequence of Tenses	– காலமுடிபு
Thesaurus	– தொகைச்சொல் நிகண்டு
Transformation of Sentence	– தொடர் மாற்றம்
Transitive verb	– செயப்படுபொருள் குன்றா வினை

மொழிபெயர்ப்புக் கலை

Analysis	–	பகுப்பாய்வு
Communication	–	தொடர்பாடல்
Component	–	கூறுபாடு
Concept	–	எண்ணக்கரு
Correlation	–	இணைபு
Correspondence	–	ஒத்தியைபு
Decoding	–	குறியவிழ்ப்பு
Dialect	–	கிளைமொழி
Efficiency	–	வினைத்திறம்
Equivalent Expressions	–	சமவலு மொழிவுகள்
Generative grammar	–	பிறப்பாக்க இலக்கணம்
Ideology	–	கருத்தியல்
Idioms	–	மரபுத்தொடர்கள்
Image	–	படிமம்
Perception	–	புலக்காட்சி
Pragmatic model	–	பயன்வழி மாதிரியுரு
Pragmatic translation	–	பயன்வழி மொழிபெயர்ப்பு
Process	–	நிகழ்முறை
Proverb	–	பழமொழி
Reference Books	–	பார்வை நூல்கள்
Relativity	–	தொடர்பியல்
Semantic relationship	–	சொற்பொருள் உறவு
Significance	–	பொருண்மை
Signified	–	குறிபடுபொருள்
Signifier	–	குறிப்பான்
Socio-relational patterns	–	சமுக உறவுக்கோலம்
Source books	–	மூல நூல்/ வளநூல்
Structuralism	–	அமைப்பியம்
Surface Level	–	மேற்பரப்பு மட்டம்
Syntactical elements	–	தொடர் இலக்கணக் கூறுகள்
Target Language	–	இலக்குமொழி
Technique	–	நுண்முறை
Traditional model	–	மரபுவழி மாதிரியுரு

11th Advance Tamil - FINAL.indd 171 14-02-2019 17:28:17

கண்ணாடி

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'டிரான்ஸ்லேசியோ'(Translatio) என்னும் சொல் இடம்பெற்றுள்ள மொழி

   அ) தமிழ் ஆ) இலத்தீன் இ) ஆங்கிலம் ஈ) பிரெஞ்சு

2. கம்பராமாயணம், கீழ்க்காணும் மொழிபெயர்ப்பு வகைகளுள் ஒன்றைச் சார்ந்தது. அஃது எது?

   அ) நேரடி மொழிபெயர்ப்பு ஆ) சுருக்கம் இ) மொழியாக்கம் ஈ) தழுவல்

3. மொழியாக்கத்திற்கு எடுத்துக்காட்டாக அமையாத பெயரைத் தேர்ந்தெடுக்க.

   அ) சுவாமி வேதாசலம் – மறைமலையடிகள்

   ஆ) சூரிய நாராயண சாஸ்திரி – பரிதிமாற் கலைஞர்

   இ) தைரியநாதன் – வீரமாமுனிவர்

   ஈ) கனக. சுப்புரத்தினம் – பாரதிதாசன்

4. சரியான மொழிபெயர்ப்புத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

   அ) Where do you stand in your family? – நீ உன் குடும்பத்தில் எங்கே நிற்கிறாய்?

   ஆ) He is a man. – அவன் ஒரு மனிதனாக இருக்கிறான்

   இ) Please lend me your ears. – அருள்கூர்ந்து உங்கள் செவிகளைக் கொடுங்கள்

   ஈ) The Professor teaches Tamil. – பேராசிரியர் தமிழ் கற்பிக்கிறார்

5. சரியாகப் பொருந்தியுள்ள விடைக்குறிப்பைத் தேர்க.

   அ) பகுப்பாய்வு – 1. Image

   ஆ) படிமம் – 2. Efficiency

   இ) வினைத்திறன் – 3. Idioms

   ஈ) மரபுத்தொடர்கள் – 4. Analysis

	அ	ஆ	இ	ஈ
1.	3	1	2	4
2.	4	1	2	3
3.	1	2	4	3
4.	1	2	3	4

குறுவினா

1. மொழிபெயர்ப்பு என்றால் என்ன? சான்று தருக.
2. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கக் கூடாது என்பதைச் சான்றுடன் விளக்குக.
3. கீழ்க்காணும் வடசொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.
   சங்கீதம், கமலம், சர்வகலாசாலை, சிநேகம், மிருதங்கம்
4. தமிழில் மொழிபெயர்ப்புக்கெனத் தோன்றிய இதழ் ஒன்றைக் கூறுக.

11th Advance Tamil - FINAL.indd 172 14-02-2019 17:28:17

சிறுவினா

1. பழமொழியை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் சிக்கல்கள் யாவை?
2. மொழிபெயர்ப்பாளருக்குத் துறைவாரியான கலைச்சொற்கள் தெரிதல் வேண்டும் – இக்கூற்றைச் சான்றுடன் விளக்குக.
3. கீழ்க்காணும் சொற்களின் கலைச்சொல்லாக்க வடிவம் தருக.

   (*Tele*– **தொலை;** *Mono*– ஒற்றை/ தனி)

   அ) *Tele – vision* ஆ) *Tele – scope* இ) *Tele – film* ஈ) *Tele – phone*

   உ) *Tele – pathy* ஊ) *Mono – cycle* எ) *Mono – acting* ஏ) *Mono – logue*

   ஐ) *Mono – syllable* ஒ) *Mono – rail*
4. ஒலிபெயர்ப்பு – சிறு குறிப்பு வரைக.
5. கீழ்க்காணும் கவிதை வரிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திடுக.

ஏனடா தம்பி, தயக்கம், எழுவாய்
பழங்கதை பேசிப் பயனிலை புதிதாய்ச்
செயப்படு பொருளைச் சிந்தையில் நிறுத்து
நன்மையை நாடு நாடு உன் நாட்டை
உண்மையைத் தழுவுநீ உன்னைத் திருத்திப்
பிறரைத் திருத்து பேணு பொதுநலம்
சுயநலம் தனைச்சுடு நினைவைச் சுத்தம்செய்
சிறுமையை நீக்கு சிந்திக்கப் பழகு
மூலையில் கிடந்து முடங்கியது போதும்
வெளியே புறப்படு விழிகளைத் திறந்தே

– மீரா கவிதைகள்

நெடுவினா

1. மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்களைச் சான்றுகளுடன் விளக்குக.
2. மொழிவளர்ச்சிக்கு, மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது? விளக்குக.

படித்துப் பயன்படுத்துவோம்

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லையும் பயன்படுத்திப் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்றுத் தொடர்கள் உருவாக்குக.

   எ.கா. அழகு

   மயில் அழகான பறவை. (பெயரெச்சம்)

   தாமரை அழகாகப் பூத்திருந்தது. (வினையெச்சம்)

   மல்லிகைப் பூ அழகானது. (வினைமுற்று)

   அ. இனிமை ஆ. மகிழ்ச்சி இ. உயர்வு ஈ. மென்மை உ. சுறுசுறுப்பு

11th Advance Tamil - FINAL.indd 173 14-02-2019 17:28:17

2. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டங்களை நிரப்புக.

1			■	2	6		8
■	■	7	■		■	■	
			3		■	■	
4	5				■		
			■		10		
				12			
13			■				
	15			11		14	9

இடமிருந்து வலம்

1. மயில் கூவியது என்பது ---------வழு. (3)
5. ஒருவர், முன்னிரண்டடி பாட, அடுத்தவர் பின்னிரண்டடி பாடிப் பாடலை நிறைவு செய்வர். அவர்களை ----------ப் புலவர்கள் என்றழைப்பர். (4)
6. பள்ளி செல்ல விரும்பு; பாடம் வெல்லக் கரும்பு – இப்பாடலில் ஈற்றில் அமைந்துள்ள நயம்------.(3)
13. குளிர்ச்சியைக் குறிக்கும் வேறு சொல்-------------. (3)

மேலிருந்துகீழ்

2. அவள் கலகலவென நகைத்தாள். கலகல என்பது--------. (8)
4. உடலில் காயம் ஏற்பட்டவருக்கு உடனடியாகச் செய்வது-------------.(5)
5. காஞ்சி அணிந்து வந்தாள் என்பது ---- ஆகுபெயர். (2)
7. மரம், செடி, கொடிகளைக் குறிக்கும் ஒரே சொல்------------.(4)
8. நாவல் என்பதற்குப்--------- என்று பொருள். (3)
10. சொல்லுக்குப் பொருள் காண உதவும் நூல்--------. (4)

வலமிருந்து இடம்

3. செம்மை என்பது ---------வண்ணம். (4)
11. நகைச்சுவையாகப் பேசுபவர்களைக் குறிக்கும்; ஆனால், தமிழ்ச்சொல்லன்று. (5)
12. நகரம் என்னும் சொல்லுக்கு எதிர்ச்சொல் (4)

கீழிருந்துமேல்

9. பொறாமைகொள்ளுதலின்தீமையைப்பற்றி வள்ளுவர் கூறும் அதிகாரம்-------.(6)
14. கவிஞரைக் குறிக்கும் வேறு சொல். (5)
15. நிலப்பகுதியைக் குறிக்கும் சொல். இடம் மாறியுள்ளது. (4)

3. கீழ்க்காணும் இரு படத்திற்கும் உரிய சொற்களை இணைத்தால், தொகைநிலைத் தொடர்கள் கிடைக்கும். அவற்றைக் கண்டறிக.

	+		ஆடுகொடி	வினைத்தொகை
	+			

	+			
	+			
	+			
	+			

4. கீழ்க்காணும் தொடர்களில் எந்தப் பகுதியில் பிழை உள்ளது எனச் சுட்டிக்காட்டுக. காரணம் அறிந்து சரியான விடையையும் தருக.

(எ.கா.) ஒவ்வொரு வீடுகளிலும் மரக்கன்று நடுதல் நன்று

ஒவ்வொரு	வீடுகளிலும்	மரக்கன்று	நடுதல்	நன்று
---------	----------	---------	------	----
1	2	3	4	5

பகுதி – 2 இல் பிழை உள்ளது. ஒவ்வொரு என்பது, ஒருமையைக் குறிக்கும். எனவே, அது சுட்டும் பெயர்ச்சொல்லும் (வீடுகள்) ஒருமையிலேயே வருதல் வேண்டும். ஆகவே, **ஒவ்வொரு வீட்டிலும் மரக்கன்று நடுதல் நன்று** என்பதே சரியானது.

அ) தாயைக் கண்டதும் குழந்தைக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி

1	2	3	4	5
தாயைக்	கண்டதும்	குழந்தைக்குத்தான்	எத்தனை	மகிழ்ச்சி

ஆ) கண்ணன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற முயற்சித்தான்

1	2	3	4	5
கண்ணன்	ஓட்டப்போட்டியில்	வெற்றி	பெற	முயற்சித்தான்

இ) மாதவி மணிகளைக் கோர்த்து மாலை யாக்கினாள்

1	2	3	4	5
மாதவி	மணிகளைக்	கோர்த்து	மாலை	யாக்கினாள்

ஈ) எனக்கு இலக்கணம் சொல்லிக் கொடுத்தது மெய்யம்மை

1	2	3	4	5
எனக்கு	இலக்கணம்	சொல்லிக்	கொடுத்தது	மெய்யம்மை

உ) எனது தாய் எனது வீட்டிற்கு வந்தாள்

1	2	3	4	5
எனது	தாய்	எனது	வீட்டிற்கு	வந்தாள்

11th Advance Tamil - FINAL.indd 175 14-02-2019 17:28:17

5. *கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து தமிழில் மொழிபெயர்த்திடுக.*

(i) *We have been preparing a good drama program since last week. It will be completed by the end of next week. This program will be approved by our Headmaster surely. Then we will play the same in front of the audience during our Annual day celebration.*

(ii) *Last year the Independence day was celebrated in our school in a grand manner. The retired District collector presided over the function. He delivered a good speech on the duty of every Indian. All the audience were enchanted by his speech.*

(iii) *கீழ்க்காணும் தமிழ் மரபுத்தொடருக்கேற்ற ஆங்கில மரபுத்தொடர்களை எழுதுக*

மதில்மேல் பூனை	கிணற்றுத் தவளை	குரங்கின் கை பூமாலை
பசுத்தோல் போர்த்திய புலி	முதலைக் கண்ணீர்	கரி பூசுதல்

செயல்திட்டம்

1. *உங்கள் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள ஏதேனும் ஒரு தொழிலகம் தொடர்பான சொற்களைத் திரட்டி, அகராதி உருவாக்குக.*
2. *உங்கள் பாடநூலில், ஏதேனும் ஓர் இயலைத் தேர்ந்தெடுத்து, அதனுள் இடம்பெற்றுள்ள புதிய சொல்லாக்கங்களையும், தொடரமைப்புகளையும் தொகுத்து அட்டவணைப்படுத்துக.*

அறிவோம் தெளிவோம்

ஒரு சொல்லைப் பார்த்தவுடன் அது, தமிழ்ச்சொல் அல்லது வடசொல் என்று கூற இயலுமா?

வடசொல் என்பதைக் கண்டறிய, இதோ சில குறிப்புகள்

- தமிழ் எழுத்துகளின் வடிவம் இல்லாச் சொற்கள். (எ.கா.) புஷ்பம்
- தமிழில் மொழிமுதல் வாரா எழுத்துகளில் தொடங்குவன. (ரம்யா, லட்டு)
- தமிழில் மொழி இறுதியில் வாராச் சொற்கள் (எ.கா.) வீரேந்திரநாத்
- தமிழில் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்கு உட்படாத எழுத்துகள் தொடர்ந்து வருவன. (பக்தி)
- தனிக்குற்றெழுத்தை அடுத்து, ரகர ஒற்று அமைந்திருப்பன. (எ.கா.) தர்மம், நிர்வாகம்
- எதிர்ப்பொருளை உணர்த்தவரும் முன்னொட்டுடன் கூடிய வடசொற்கள். (எ.கா.) நீதி – அநீதி, நியாயம் – அநியாயம்
- அழுத்தமாக ஒலிக்கக் கூடிய சொற்கள். (எ.கா.) பாவனை
- வேர்ச்சொல் அல்லது காரணப்பெயர் இன்றி அமையும் சொற்கள் போன்று வருவனவெல்லாம் வடசொற்களே.

11th Advance Tamil - FINAL.indd 176 14-02-2019 17:28:18

இணையச்செயல்பாடு

தொடரியல் மற்றும் பொருண்மையியல்

இலக்கியங்கள் வழி இலக்கணம் அறிவோம் !



படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி tamilvu என்னும் இணையப்பக்கம் செல்க .
2. திரையில் தோன்றும் விரிதரவு என்பதைத் தேர்வு செய்தவுடன், தொடரியல் மற்றும் பொருண்மையியல் என்னும் தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும்.
3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள, தொடரியலையும் உணர்பொருள், உவமை–உருவகம், ஒருபொருள் பன்மொழி ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள, பொருண்மையியலையும் தேர்வு செய்க.

   எடுத்துக்காட்டாக, உவமை–உருவகம் அறிவதற்கு நூல் ஒன்றைத் தேர்வுசெய்து, பாடல் எண்ணை உள்ளீடு செய்வதன்மூலம், அப்பாடலுக்குரிய உவமை–உருவகம் அறிந்து கொள்ளலாம்.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :

படி 1

படி 2

படி 3

தொடரியல் மற்றும் பொருண்மையியல் இணையப் பக்கத்தின் உரலி:

http://www.tamilvu.org

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

இணையச்செயல்பாடு

தமிழ் மின் அகராதி

தமிழ்ச்சொல் அறிவோம்!!



படிகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் உரலி/ விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி 'tamillexicon' என்னும் இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. இப்போது திரையில் தோன்றும் தேடுபெட்டியில் ஆங்கிலச் சொல்லை உள்ளீடு செய்து, அதற்கிணையான தமிழ்ச்சொற்களை அறிக.

   எடுத்துக்காட்டாக, 'lexicon' என்னும் சொல்லை உள்ளீடு செய்து சொற்களஞ்சியம், பேரகராதி, அகராதி போன்ற தமிழ்ச்சொற்களை அறிக.

செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1



படி 2

படி 3

தமிழ் மின் அகராதி இணையப் பக்கத்தின் உரலி

http://www.tamillexicon.com/?s=website&act=findout

B145_11_ADT_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

11th Advance Tamil - FINAL.indd 178 14-02-2019 17:28:21